Edited by the Swami Vallinayakam

THE VIVEKA BHANU

விவேக பாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"—திருக்குறள்.

வால்யூம் I] மேமீ [புத்தகம் 9

TRUTH.

சத்தியம்.

சத்தியமென்பது உண்மை அதாவது உள்ளது எனப்பொருள்படும். உள்ளதெனின் எக்காலத்தும் உள்ளதெனவே கொள்ளற்பாலது. என்னை? "உள்ளது போகா"தாதலின். உள்ளதாகவே என்றும் மாறுதலடையாதது மாகின்றது. என்னை? விகாரங்கள் யாவும் தோன்றும் பொருள்களிலேயே உளவாதலானும் உள்பொருள் என்றும் தோன்றற் கிடனின்றாதலானு மென்க. எனவே சத்திய மென்பது மாறுதலடையாதெக்காலத்துமுள்ள பொருளென்றாகின்றது. இக்கருத்துப் பற்றியே 'சத்தியம்' என்னும் பதம் கடவுளைக் குறிக்க நிற்கின்றது. இது நிற்க.

சத்தியத்திற்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி விசாரிப்பாம். நம்மிடத்தில் அநேக சக்திக ளிருக்கின்றன வென்பது யாவர்க்கும் வெளிப்படை. அவற்றுள் பிரதான மானவை யிரண்டேயாம். அவையாவன:—புறத்திலுள்ளவைகளைக் கிரகிப்பதொன்று; அகத்திலுள்ளவைகளைத் தோற்றுவிப்ப தொன்று. இவற்றுள் முன்னையதற்குச் சாதனமா யிருப்பவை மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய பஞ்சேந்திரியங்களும் மனமுமாம். பின்னையதற்கு, மனமும் வாக்கு பாதம் பாணி பாயுரு முதலிய பஞ்சேந்திரியங்களுமாம். இவ்விருசக்திகளும் தொழிற்படுதற்குப்பொதுவான சாதனம் மனமாகலின், ஒன்று தொழிற்படுங்கால் மற்றொன்று தொழிற்படுவதின்று. இவ்விரண்டினுள் ஒவ்வொன்றும் இரண்டு விதத்தில் தொழிற்படுகின்றது. அவையாவன:—முதலாவது, உள்ளதை உள்ளவாறு கிரகித்தலொன்று, உள்ளதை விபரீதமாய்க் கிரகித்தலொன்று; இரண்டாவது, உள்ளதை உள்ளவாறு தோற்றுவித்தலொன்று, உள்ளதை விபரீதமாகத் தோற்றுவித்த லொன்று. சத்தியமென்பது உள்பொருளைக் குறிக்கின்றதாதலின், உள்ளதை உள்ளவாறு கிரகித்தலும், உள்ளதை உள்ளவாறு தோற்றுவித்தலும் அதனுளடங்கும். அடங்கவே ஏனையவிரண்டும் அசத்தியத்துட்படு மென்பது பெறப்படுகின்றது. இதுவரை கூறியவற்றினின்றும் சத்தியமென்பதில் கடவுளும், அவரை யுணர்தலும், உணர்ந்தவைத் (அவர்தன்மையை) தோற்றுவித்தலும் அமையுமென அறிகின்றோமன்றோ? இது நிற்க.

நாம் ஒவ்வொரு விஷயத்தையும் கிரகிக்குங்கால் அவ்வவ் விஷயாகார[1]மாகவே யிருக்கின்றோமென அறியத்தக்கது. ஆனால், "நாம் சரீரத்தின் வடிவமாயிருக்க, விஷயங்களைக் கிரகிக்குங்கால் அவற்றின் வடிவமாக இருக்கின்றோ மென்பது எங்ஙனம் பொருந்தும்?" என்னும் ஆக்ஷேபம் பலர்க்குத் தோன்றலாம். இஃது ஊன்றி நோக்காக் குறையால் தோன்றுவது. நமது சரீரமே நமென்னும் எண்ணம் எம்மட்டிலேதோ அம்மட்டும் இங்ஙனமே தோன்றற்பாலது. அமெரிக்கா (America) வில் ஒரு ஸ்திரீயானவள் தனது சரீரம் கண்ணாடியினால் உண்டாக்கப்பட்டதென்று வெகு நாளாய் நினைத்துக்கொண்டுவந்தவள், கதவு முதலியவைகட்குச் சமீபமாய்ச் செல்லும் பொழுதெல்லாம் அவைகளிற் பட்டால் உடைந்து போமெனக் கருதி, மிகவும் ஜாக்கிரதையாக நடமாடிவந்தாளெனக் கேட்டிருக்கின்றோம். அதுபோல் நமது எண்ணத்தினாலேயே நாம் சரீரத்தின் வடிவமாயிருப்பதாகத் தோன்றுகின்றதேதவிர வேறன்று. ஒருவன் மேஜையை விஷயமாக்கும்[2] போது, மேஜையும் அதனைக் கிரகிக்கும் அறிவும் ஆக இரண்டு பொருள்களிருக்கின்றன. அவனே நாற்காலியை விஷயமாக்குகிறானென வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் நாற்காலியும் அதனையறியும் அறிவுமாகிய இரண்டு பொருள்களே இருக்கின்றன. அது போலவே அவன் சரீரத்தை அவன் விஷயமாக்குங் காலத்திலும் சரீரமும் அதனையறியும் அறிவுமாகிய இரண்டு பொருள்களுமே இருக்கின்றன. இங்ஙனம் சாதாரணமாய் மனிதர்கள் தங்களுடைய ஜாக்கிர, சுவப்ந அவஸ்தைகளில் ஏதேனும் ஓர் விஷயத்தைக் கிரகித்துக்கொண்டே இருக்கின்றார்கள்; அக்காலங்களிலெல்லாம் கிரகிக்கப்பட்ட விஷயமும் அதனையறியும் அறிவுமே இருந்துகொண்டிருக்கின்றன. இவ்விரண்டனுள் விஷயங்கள் மாத்திரம் மாறிமாறிவர அறிவோ மாறாது அவைகளையெல்லாம் கிரகித்துக்கொண்டிருக்கின்றது. எதார்த்தம் இங்ஙனமிருத்தலின், நமது வடிவம் அறிவா? சரீரமா? சரீரமென்பீராயின் நமக்கு விஷயமாகும் மேஜையையும் நமதுவடிவமெனக் கூறவேண்டிவரும். ஆதலின் உண்மை அஃதன்று. பின், நமது சொரூபம் யாதெனின், அறிவேயாம்.

இனி, விஷயங்கள் நமக் கெங்ஙனம் புலப்படுகின்றனவென ஆலோசிப்பாம். ஐரோப்பிய சாஸ்திரிகள் கூறுவதாவது:—வெளியிலுள்ள விஷயங்களின் ரூபங்கள் சூரியொளியின் மூலமாக நேத்திரேந்திரியத்தில் பிரதிபிம்பிக்கின்றன. அவற்றை உணர்ச்சி (Sensory) நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோவதால் விஷயப்பிரக்ஞை[3] யுண்டாகின்றன. இதுபோலவே, சப்தமும் கந்தமும் அவையுண்டாகும் இடத்தினின்றும் வாயுவின் சலனத்தினால் நடத்தப்பட்டு சுரோத்திர[4] ஆக்கிரா[5]ணேந்திரியங்களில் தாக்க, அங்குள்ள உணர்ச்சி நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோவதாலும், ஸ்பரிச, ரசவிஷயங்கள் துவக்கு ஜிஹ்வை[6]களோடு சம்பந்தப்படுங்கால் அவற்றிலுள்ள உணர்ச்சி நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோவதாலும் கிரகிக்கப்படுகின்றனவென்பதே. நமது சாஸ்திரங்களின் கருத்து என்னை? யெனின், நேத்திர சுரோத்திரேந்திரியங்கட்கும் பொருள்களுக்கும் சம்பந்தமுண்டாகும்போது இந்திரியங்கள் மூலமாக அந்தக்கரண[7]த்தின் விருத்தி வெளியிற்சென்று விஷயாகாரமாகியும், மற்ற இந்திரியங்களுக்கும் அவற்றின் விஷயங்களுக்கும் சம்பந்தமுண்டாகும் போது அவ்வவ் விந்திரியங்க

1 விஷயாகாரம்—விஷயத்தின் வடிவம். 2 விஷயமாக்கும்—கிரகிக்கும். 3 பிரக்ஞை—அறிவு. 4 சுரோத்திரம்—செவி. 5 ஆக்கிராணம்—மூக்கு. 6 ஜிஹ்வை—நா. 7 அந்தக்கரணம்—உட்கரணம் அதாவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

ளின் கோளக[8]ங்களிலிருந்தே விஷயாகாரமாகியும் கிரகிக்கின்றதென்பதாம். இவ்விரண்டனுள் உண்மை எதுவாயினும் அவற்றின் முடிவு ஒன்றாயிருக்கின்றது. ஐரோப்பிய சாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி ஆன்மாவின் சக்தியே (மனம் அல்லது அறிவே) விஷயாகாரமாகின்றது. நமது சாஸ்திரங்களின் கருத்துப்படியும் (அறிவின் சத்திக்குச் சாதனமாயிருக்கும்) அந்தக்கரண விருத்தியே விஷயாகாரமாகின்றது. ஆகலின், அறிவே விஷயாகாரமாகின்றதென்றும். விருத்தி அந்தக்கரணத்தை விட்டும் அந்தக்கரணம் அறிவை விட்டும் தொழிற்படுதலின்றென்றறிக. இதுவரை கூறிவந்ததால் அறிவே அதாவது நாமே விஷயாகாரமடைந்தே ஒவ்வொரு விஷயங்களையும் கிரகிக்கிறோமென்பது புலப்படுகின்றதன்றோ? அதுபோலவே எவ்விஷயத்தையேனும் தோற்றுவிக்குங் காலத்தும் நாம் அவ்விஷயாகாரமாக விருந்தே தோற்றுவிக்கிறோமென்றறியத்தக்கது இங்ஙனமிருத்தலின்,

நமது வாழ்க்கை இவ்வுலகின்கண் சத்தியமாயிருக்கவேண்டுமாயின், நாம் சத்தியத்தை (கடவுளை) புணர்ந்து அதாவது சத்தியமே (கடவுளே) யாகி, சத்தியத்தையே (கடவுட்டன்மையையே) தோற்றுவிக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றது. பெறப்படவே இதற்கு மாறாக நடைபெறும் வாழ்க்கையாவும் அசத்தியமென்றேற்படுகின்றனவன்றோ?

உலகத்தில் சாதாரண ஜனங்கள் மெய்வாழ்க்கையைத் துறந்து பொய்வாழ்க்கையிலேயே ஆனந்திக்கின்றனர். பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளுதலாலும் அகத்திலுள்ளதை உள்ளவாறு தோற்றுவிக்காது கபடமாகவே நடித்தலாலும் அன்னோரும் அசத்தியப் பொருளேயாகி மரித்தவராகின்றனர். ஜீவித்திருத்தலென்பது சத்திய வாழ்க்கையிற் பொருந்துமேயல்லது அசத்திய வாழ்க்கையில் எங்ஙனம் பொருந்தும்?

“சத்தியத்திலும் மேலான சமயம் பிறிதொன்றில்லை” எனப் பெரியோர் கூறியிருக்கின்றனராதலின், அதனையே புருஷார்த்தமென யாவரும் கைக்கொண்டு ஒழுக வேண்டியவராயிருக்க, அந்தோ! பெரும்பாலாரின் அறிவு, எண்ணம், பேச்சு, செய்கையாகிய யாவும் அசத்தியமாயிருப்பின், அவரது நிலைமையைப் பற்றிப் பரிதபிக்காது யாது செய்வாம்?

மேற்கூறிய பிரகாரம் சத்தியமாக வாழ்தல் பிரயாசமாயிருப்பினும் அவரவர் பக்குவத்திற் கேற்றவாறு அதற்குரிய வழியில் நிற்றலேனு மாவசியகமன்றோ? அதுவும் செய்கின்றனரில்லையே!

“வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்”

(இதன் பொருள். — மெய்ம்மை யென்று சிறப்பித்துச்சொல்லப்படுவது யாதென்று வினவினால், அது [பிறிதோருயிர்க்கு] சிறிதாயினும் தீமையைத்தாராத சொற்களைச் சொல்லுதல்) என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளியிருப்பதின் தாற்பரியம் யாதெனின், நடந்ததைச் சொல்லுவதும் பிறர்க்குளதார்த்தத்தில் தீமையை விளைவிக்குமாயின், வாய்மை யாகாதென்பதே. இதனால், பிறர்க்கிதஞ்செய்தலையே தலையாகக் கொள்ளல்வேண்டுமென்பது வெளியாகின்றது. இஃதே அவர் கருத்தென்பது,

---

8 கோளகம் — வட்டம்; இவ்விடத்தில் இந்திரியங்களிருக்குமிடம்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" என்று

கூறியிருத்தலினாலும் நன்கு விளங்கும். பிறர்க்கிதஞ்செய்யும் வார்த்தைகளை யே உபயோகிக்கவேண்டுமென்று கூறியதினால், எண்ணமும் செய்கையும் அவ்வாறே யிருக்க வேண்டு மென்பதும் அதனுள் அடங்கியிருக்கின்றது. எண்ணமோ, செய்கையோ வேறாகவும் சொல்மாத்திரம் இனிமையாகவும் காட்டுவது பொய்யினும் பொய்யேயாகும். இவ்வாய்மையை யொருவன் கடைப்பிடிக்கினும் அஃது சத்தியவாழ்க்கைக்கு நடாத்துமன்றோ? இந்நிலையில் நிற்பவர்தாம் இப்பூவுலகின்கண் எத்தனைபேரிருப்பார்கள்? மிகவும் சிலரே யென அஞ்சாது யாவரும் கூறலாமே!

மிருகங்களைப் பார்க்கிலும் மனிதனுக்கு சிறப்பாயுள்ளன யாவை? வாக்கும் பகுத்தறிவுமன்றோ? மனிதன் என்பான் தனக்கு விசேஷமாய்க் கிடைத்துள்ள பகுத்தறிவை யுபயோகித்து, சத்தியமொழிகளைக் கூறும் கடமையுடையவன் என்பது அவனது அமைப்பினாலேயே பிரத்தியக்ஷமாகின்றது. இக்கடமையை ஓராது தமது வாக்கிந்திரியம் சென்றவாறு பொய்மொழிகளைக் கூறி, உம்மை[9]யில் இறுமாந்தாரே இம்மையில் மூகைய[10]ராகக் காணப்படுவ ரென்பார் கர்மத்தின் ரகசியங்களை யோர்ந்த மூதறிவுடையோர்.

ஆதலின், பொய்வாழ்வில் மரித்துக் கிடப்பவராகிய யாவரும் அவரது எச்சரிக்கையை நன்குணர்ந்து, மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களையும் சத்தியத்தையே நினைக்கவும், பேசவும், செய்யவும் பழக்கி, உயிர்த்தெழுந்து, மெய்வாழ்வெய்தி, சித்தியானந்தத்தை யடையக் கடவர்.

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற."

பத்திராதிபர்.

"மனித சரீரம் கொதிக்கிற சட்டியைப் போலிருக்கிறது. மனமும் புலன்களும் அந்தச் சட்டியிலிருக்கும் ஜலம் அல்லது அரிசி அல்லது உருளைக்கிழங்குகளுக்குச் சமானம். இந்தச்சாமான்களை சட்டியிற்போட்டு அடுப்பில்வைத்து எரித்தால் அவைகள் விரல்சுடும்படியான அவ்வளவு சூடுள்ளனவாயிருக்கின்றன. சூடுசட்டியிலுமில்லை அல்லது அதிலிருக்கும் சாமானிலுமில்லை, ஆனால் அடுப்பிலிருக்கும் அக்கினியிலிருக்கிறது. அது போலமனிதர்களுக்குள் இருக்கும் பிரமமாகிய அக்கினி மனதையும் புலன்களையும் அதனதன் வழியில் நடத்துகிறது. இந்தபிரமாக்கினி அமர்ந்து போனால் புலன்களும் கருவிகளும் ஒடுங்கிவிடுகின்றன"—ஸ்ரீ ராமகிருஷ்ணர் (Sree Ramakrishna)

*
* *

"கடவுள் நம்மிடத்திலிருப்பது போல புலியினிடத்திலுமிருக்கிறார் என்று நாம் புலிக்கருகிற்போய் அதை எதிர்க்கலாகாது. அதுபோல கடவுள் துஷ்டனிடத்தில் வசித்தாலும் அவர்களைச்சேரலாகாது"—ஸ்ரீ ராமகிருஷ்ணர் (Sree Ramakrishna)

---

9 கழிபிறப்பு. 10 ஊமையர்.

*TRUE AND FALSE PIETY.

பக்தி

எதார்த்தம்: போலி.

---:o:---

இவ்வுலகின்கணுள்ள மாந்தர்களுள் சத்தியக் கொள்கைகளிற் கபடமற்ற மெய்ப்பற்றுடையாரைக் காணுதல் மிகவும் அரிதாயிருக்கின்றது. அத்தகையை பெரும்பேற்றைப் பெற்ற சிலரையும் உலகதந்திரங்களில் தேர்ச்சியுற்ற ஏனையோர் அறிந்து ஆதரியாது பரிகசித்தலைப் பார்க்கின்றோம். ஆனால் அவரே, தோற்றமாத்திரையில் மிக்கார் போன்றிருப்பவரை மதித்துபசரித்து, மேன்மைப்படுத்தவும் காண்கிறோம். எதார்த்தத்தில் பக்தியென்பது இன்னதெனவும், மெய்ப்பக்தர்களுடைய குணாதிசயங்கள் இன்னின்னவெனவும் அவர்க்கு விளங்காமையினாலேயே இங்ஙனம் சம்பவித்தலின், அவ்விஷயங்களைப்பற்றிய உண்மையான கருத்தை ஒருவாறு சுருக்கி அடியில் வரைகின்றோம்.

பக்தியானது முக்கியமாக ஆறுவிதங்களாயிருக்கின்றதெனக் கூறலாம். அவையாவன:—

1. அச்சத்தினாலுண்டாவதொன்று.
2. தன்னினத்தாரால் கைக்கொள்ளப்படுதலால் தானும் கைக்கொள்ளவேண்டுமென்னும் எண்ணத்தாலுண்டாவதொன்று.
3. பிறர்கண்டு மெச்சவேண்டுமென்னும் எண்ணத்தாலுண்டாவதொன்று.
4. 'யாவும் நன்மைக்கே' என்னும் தப்பிதமான அபிப்பிராயத்தோடு கூடினதொன்று,
5. தன்னய நாட்டத்தாலுண்டாவதொன்று.
6. பயமற்ற நேர்மையாலும் உண்மைவிருப்பாலுமுண்டாவதொன்று.

இவற்றுள் ஒன்றுமுதல் ஐந்துவரையும் காட்டப்பட்ட பக்திகள் போலியேயாம். ஏனெனின், அச்சத்தாலுண்டாவது மனப்பூர்த்தியோடு செய்யப்படுவதல்ல. ஆசாரியக வுண்மைஇன்மைகளை ஓர்ந்துசெய்யப்படுவதுமல்ல. பின்னையோ, வெறும் கோழைத்தனத்தினால் அநுஷ்டிக்கப்படுவதொன்றாயிருக்கின்றது. இவ்வித பக்தியுடையார், உண்மையில் பெரியோரல்லராயிருப்பினும் தோற்றத்தில் அன்னோர்போன்று நடிப்பவர் கூறும் மொழிகள், உசிதமானவையோ, அல்லனவோ என்று தாம் விசாரியாமலே, 'அவைகட்கிணங்க ஒழுகாவிடின் பெருங்குற்றத்திற் காளாகவேண்டு'மெனப் பயந்து நடக்குந் தகைமையுடையவராயிருக்கின்றனர். அதனால் அவர் எவ்வித தீங்கும் செய்யாமலும் எவருடைய விரோதத்தையும் சம்பாதியாமலும் காலத்தைக் கழிப்பாராயினும் என்ன பயனையடைவர்?

எந்த மனிதனுக்கு விரோதிகளிருக்கின்றார்களோ; எந்த மனிதன் அதிகமாகத் தூஷிக்கப்படுகின்றானோ; எந்த மனிதன் நியாயமான விஷயங்களில் பலருடைய அபிப்பிராயத்தையுங் கவனியாமல் நடந்து, அதற்காகத் தப்பிதமாய் நிந்திக்கப்படுகிறானோ; அந்த மனிதனே இவ்வுலகத்தில் ஏதேனும் நன்மைசெய்தானெனப்படுவான். மற்றவர்கண்டு பின்தொடருமாறு தான் சென்ற மார்க்கத்தின் அடையாளங்களை இவ்வுலகில் விட்டுப் பிரிபவனும் அவனே.

---

*Adapted from a February issue of **The Life**, an American weekly journal.

சமாசாரப் பத்திரிகைகள் தம்மைப்பற்றி ஒன்றும் பேசாதிருப்பதைப் பார்க்கி லும் தம்மை நிந்திப்பதில் மிக்க சந்தோஷ மடைவதாக ஜெனரல் பட்லர் (Gen Butler) என்பவர் அடிக்கடி சொல்வது வழக்கமாம்.

பாலப்பிரசங்கிகளிற் பலவிடங்களுக்கும் விதித்த ஸ்பர்ஜன் (Spurgeon) என் னும் கிறிஸ்துமதப் பிரசங்கியா ரொருவர் "தமது பாவியர்களுக்கு விரோதமாகச் சமா சாரப்பத்திரிகைகளில் ஒன்றும் சொல்லுததால் அவர்கள் யாதொரு நன்மையும் செய்ய வில்லையோ வெனச் சந்தேகிக்கிறேன்" என்று ஒருகாலத்திற் கூறியிருக்கிறார்.

தமக்குப் பிற்காலத்தில் தமது பெயரால் ஒரு சபை விளங்கிவரும்படி கிறி ஸ்து மதாபிவிர்த்தியில் அவ்வளவுதூரம் பிரயாசையெடுத்துவரும் கீர்த்திபெற்ற ஓர் போதகருமாகிய ஜான்வெஸ்லி (John Wesley) என்பவர் "களவொன்று தவிர மற்றப் பாவங்களெல்லாம் நான் செய்ததாக ஜனங்கள் நிந்திக்கிறார்கள்" என்று ஒரு பிரசங்கத் தில் கூறினாராம். அப்பொழுது விர்த்தாப்பியமான ஓர் ஸ்திரீ யெழுந்து "ஆம், நீர் திருட வும் செய்கிறீர். எங்களுடைய கைக்கோடாரியை இரவலாக வாங்கின நீர் திரும்பக் கொடுத்தீரில்லை" என்று சொல்ல, அப்பெரியோர் "சரி, சரி; இப்பொழுதுதான் குறை தவிர்ந்தது" என்றனராம்.

சகோதரர்களே! கவனியுங்கள். இப்பெரியோர் கூறிய மொழிகள் உண்மை க்கு விருத்தமாயிருக்கின்றன வென்று நினையாதீர்கள். உலகத்தில் விவேகிகள் சிலர். அவிவேகிகளோ பலர். ஆதலின் ஜனசமுதாயத்தின் நன்மையையும், சீர்திருத்தத்தையுங் கருதி, பெரியோர்கள் ஆழ்ந்த கருத்தோடு செய்யத்துணியும் ஒவ்வொரு பிரவர்த்தியின் உண்மையையும் சாதாரண ஜனங்கள் கிரகிக்கமுடியாமல் அவரவருடைய தப்பிதமான அபிப்பிராயத்தை வெளியிடுவது வழக்கம். ஆதலின் எவ்வளவுக் கெவ்வளவு சாதார ண ஜனங்களால் தூஷிக்கப் படுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவே பெரியோர்களுலக நன்மைக்காகப் பாடுபடுகிறார்களென்பது வெளியாகின்றது.

யதார்த்தம் இங்ஙனமிருத்தலின், நியாயமற்ற தூஷணைக்குப் பயப்பட்டுத் தாம் ஜீவிப்பதே பிறர்க்குத் தெரியாமற் காலத்தைக் கழிப்போரது பக்தி எத்தன்மை யுடை யது! இஃதும் யதார்த்த பக்தி யாகுமோ?

இனி, நான் சேர்ந்திருக்கும் சங்கத்தினால் அநுஷ்டிக்கப்படுவதைத் தானும் கைக்கொள்ளவேண்டு மென்னும் எண்ணத்தாலுண்டாகும் பக்தியைப்பற்றி ஆலோசி ப்பாம். அப்பக்தியுடையோர் சிரத்தா பூர்வமாகப் பிரவர்த்திக்காமல் மற்றவர்க்காகவே மனவருத்தத்துடன் ஒவ்வொன்றையும் செய்கிறவர்களா யிருக்கிறார்கள். ஆதலின் அவருடைய பக்தி கடனுக்கு முறை வைக்கழிப்பதுபோன் றிருக்கின்றது.

இவ்விதமாக வெளியாசாரத்தில் மாத்திரம் பக்தனைப்போல் நடிப்பதால் என் னபிரயோஜனம்? நாம் யார்க்கேனும் அடிமைப்பட்டிருக்கின்றோமா? இல்லையே. ஆக லிருந்தும் நமது பகுத்தறிவை உபயோகித்து, எவையெவை கைக்கொள்ளத்தக்கவை யென கண்டாராய்ந்து, அவைகளை மாத்திரம் பின்பற்றி, மற்றவர் கூறுவன நமது யுக்திக் கு முரணாயிருப்பின் அவைகளைத் தாராளமாய் வெளியிடுவதுடன் அவற்றை அநுஷ்டிப் பதையும் விடுத்து, நமது ஆத்ம சுவாதந்திரியத்தை வளர்த்தாலென்ன! இந்திரியார்த்தக் காணங்களென்னும் சூத்திரமடங்கிய சரீரமாகிய பாவையை ஆட்டிவைக்கும் சூத்திர தாராய் நாமிருக்க, அதை மறந்து நாமே பாவைபோல் மற்றவர் ஆட்டும் வழியில் ஆடி னோமாகில் நமது புத்தியின் கேவலத்தைச்சொல்லவும்வேண்டுமோ! எப்பொழுதும் நம து எண்ணங்களை மறையாமல் அவற்றிற் கிணங்க நடப்பது உசிதமாகும். அங்ஙனமி

ன்றி அகத்தில் ஒன்றும் புறத்தில் மற்றொன்றுமாகக் காட்டி, உலகத்தோராலும் நமது மனதைத் தாழ்மைப்படுத்தி ஆத்ம சுவாதந்திரியத்தை இழப்பதுமன்றி பிறரும் அவ்விதஞ் செய்தற்கு வழிகாண்பிக்கிறவ ராகின்றோம். ஆதலின் வெளியாசாரத்தின்மாத்திரம் பக்தர்போ லிருப்பவரின் பக்தியை எவ்விதம் கூறலாம்! அது மெய்ப்பக்தியாகுமா?

இது நிற்க, பிறர் மெச்சவேண்டு மென்னும் எண்ணத்தாலுண்டாகும் பக்தியைப்பற்றி யோசிப்போம். அப்பக்தியுடையோர் தங்களுடைய பிரவர்த்தியைப் பார்த்து ஏனையோர் புகழின் அதிக சந்தோஷத்தையும் இகழின் அதிக துக்கத்தையு மடைகின்றார்கள். அவர் புகழையே நாடுகின்றவ ராதலின் அது நியாயமல்லாத வழியில் கிடைப்பதாயிருப்பினும் அதற்கு வேண்டியன செய்யவும் சித்தமாயிருக்கின்றனர். பெரியோர்களுடைய ஸ்தோத்திரத்தை விரும்பி அவர்களுக்குக் கீழ்ப்படியும் குழந்தையானது, தீங்குசெய்வது பிறருடைய ஸ்தோத்திரம் கிடைத்தற் கேதுவாயிருப்பின் அதையும் செய்யுமல்லவா? அதுபோலவே இவர் கொள்கைகளும் பிறருடைய புகழுக்குத் தக்கபடி மாறுமாதலின் அவரது பக்தி சூறையில் அகப்பட்ட பஞ்சுபோன்று நிலையற்றதா யிருக்குமென்பதற்குத் தடையென்ன? இதனை மெய்ப்பக்தி யென்று சொல்வாரு முளரோ?

இனி, 'யாவும் நன்மைக்கே' யென்னும் தப்பிதமான அபிப்பிராயத்தோடு கூடின பக்தியைப் பார்ப்போம். அப்பக்தி யுடையோர் கெட்டவழியில் நடப்போரது கொள்கைகளையும் நன்மைக்கென்றே கருதி அவைகளைக் கண்டிக்கமாட்டா ராதலின் அவ்வழி நடப்போர் சீர்திருத்தப்படாமையினால் தாம் கெட்டுப்போவது மல்லாமல் மற்றவர்களும் கேடுவிளைவிப்பவ ராகின்றனர். குற்றமான பிரவர்த்திகளைத் தடுக்காதிருப்பதும் அவற்றைச் செய்வதற்குச் சமானமே யாகும். மேலும் கெட்டதையும் நல்லதாகக் கருதுவோர் சரியான விவேகமுடையவரு மல்லர். இத்தகையோருடைய பக்தி எங்ஙனம் உண்மைப் பக்தியாகும்?

மேல், தன்னய நாட்டத்தால் உண்டாகும் பக்தியைப்பற்றி விசாரிப்போம். அப்பக்தியுடையோர் தமக்குத் திரவியஞ் சம்பாதித்தற்கு அதுவே நல்வழி யெனக் கொண்டு, யதார்த்த பக்தர்களைப்போல் வாய்ப்பேசவும்; மனமோ எப்பொழுதும் பணத்திலேயே நாடி நிற்கவும், தமது அந்தரங்கக் கருத்தை நிறைவேற்றும் சமயத்தை எதிர்பார்த்திருப்பவ ராகின்றனர். இவரது பக்தி கேவலத்திலும் கேவலமென யாம் பிரத்தியக்ஷமாய்க் கூறவேண்டுவ தின்றன்றோ?

இவை நிற்க, மெய்ப்பக்தியாவது, லாபம், நஷ்டம், மதிப்பு, அவமதிப்பு, வெற்றி, தோல்வி, சுயசுகம், முதலியவற்றைக் கருதாது, தமது மனோசாக்ஷி கற்பிக்கும்பிரகாரம் நினைக்கவும், பேசவும், நடக்கவும் செய்வதுமன்றி சத்தியத்தில் விருப்பமும் சகல பிராணிகளிடத்தும் காருண்யமுமுடையவராய் "நான்" "எனது" என்னும் அகங்கார மமகாரங்களை வேரோடு களைந்து, பிறருடைய சுகமே தமது சுகமென்று கருதி, பிறருடைய நன்மைக்காகவே ஜீவியகாலமுழுதும் உழைத்து, கடவுளுக்குப் பிரீதிசெய்வதா யின்றது. இப்பக்தியே உண்மைப்பக்தி. இதனையுடையாரே மெய்ப்பக்தர். இத்தகைய பக்தியுடையார் தற்காலத்தில் மிகவுஞ் சுருக்கம். நமது நாட்டில் பக்தரென்று சொல்லிக் கொள்ளும் பலர் கடவுளையும் தம்மைப்போல் தன்னயங் கருதுபவராகவே நினைத்து, சர்வவியாபகமாயிருக்கும் அவருடைய தன்மையையறியாமல், குறிப்பிட்ட சிலபொருள்களில் மாத்திரம் இருப்பதாகப்பாவித்து, அவரைச் சரீரத்தால் மாத்திரம் வணங்கியும்,

அவருக்குப் பணவுதவிசெய்தும், தமக்குச் சுகத்தைத்தேட நினைக்கின்றனர். இதென்ன அறிவீனம்! மானிடர்களுக்குள்ளேயே விசேஷ அறிவும் நடுநிலைமை நீங்காத் தன்மையுமுடையோர் தமக்கு மாத்திரம் நன்மை செய்பவரிடத்து வெறுப்பும், யாவர்க்கும் நன்மைசெய்து தமக்குத்துன்ப மிழைப்பவராயினும் அன்னோர்பால் அதிக சந்தோஷமுமுடையராயிருப்பாராதலால் கடவுளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! பணமுதலியவற்றை அவர்க்கு வழிபாடாகச் செய்வதினால் அவர் சந்தோஷமடைவாரா? அந்தோ! ஜனங்கள் அவர்க்குக் கைக்கூலிகொடுத்து அவரைத் தம்வசப்படுத்த எத்தனிக்கின்றனரோ இஃது மதியீனமும் ஐயைய அழுத்தமுமன்றோ? இவரைக்கண்டு "ஆஹா! நம்மையும் ஏமாற்றத் தொடங்கி விட்டாரோ" என்று அவர் புன்னகைபுரிகின்றார். இத்தகையோரே நமது நாட்டிற் பெரும்பாலராதலின் மேற்கூறியமெய்ப்பத்தியுடையாளா அவர் பரிகசித்தல் ஆச்சரியமன்று. ஆயினும் அவர் உண்மையை அறிந்து ஒழுகவேண்டுவ தாவசியகமாதலின் இதனையும் கூறினும். இதனைச் சற்று கவனித்து, இது முதலாயினும் இழ்வழக்கங்களைக் கடைபிடிக்கவேண்டு மென்னும் பிடிவாதத்தை விடுத்து, உலகத்தில் உலாவும் பக்தி முதலிய எவற்றிலும் எதார்த்தம் போலி என்பவைகளுள் எதார்த்தத்தை நமது விவேகத்தால் பகுத்தறிந்து, அதனையே பின்பற்றி, நமக்கும் பிறர்க்கும் சுகத்தைத் தேடிக்கொள்வதுமல்லாமல் பகவானுடைய கிருபைக்கும் பாத்திரமாகும் பொருட்டு நாமெல்லாரும் முயற்சிப்போமாக.

S. வேதமூர்த்திமுதலியார். B. A.

SELF DENIAL.

தன்னயம் தவிர்த்தல்.

இவ்வுலகின்கண் உள்ள சடப்பொருள்களை நாம் சற்று உற்றுநோக்குவோமாயின், அவைகளிடத்தில் சுயகபாரசட்டம் அறபமுமில்லையென்பது நமக்கு நன்குபுலப்படும். யாதொரு வசும்மாறும் வேண்டாதே சூரியன் தனது செங்கதிர்களால் இப்பூமியிலுள்ள சுளிருளைப்போக்கி, நமக்கு ஆனந்தத்தை விளைவிக்கிறான். மரம், கொடி, செடி, முதலியன தத்தம் பலன்களை முறையே தத்தமக்குரிய அவ்வப்பருவத்திலே கொடுக்கின்றன; அன்றியும் நாள்தோறும் புதிய மலர்கள் நற்கந்தத்தால் நமது வாசனேந்திரியத்தை இரம்மியப்படுத்துகின்றன; மூலிகைகளுடையும் பயனுக்கோர் அளவில்லை யென்பதை யாம் பிரத்தியேகமாய்க் கூறவேண்டுவ தின்று. இது நிற்க, பறவை, புழுமுதலியவைகளின் தன்மையும் அவ்விதமே யிருக்கின்றது. பட்சிகள் தங்களுடைய இங்கிதவோசையால் நமது செவிப்புலனை யின்புறச் செய்கின்றன. நமது கட்புலனுக்குக் கேவலமாகத் தோன்றும் நிலப்பூச்சிகளாகிய காசகில்லாப் பூச்சிகளோ பாழ்நிலங்களையும் நானாவர்த்தியில் நல்ல விளைநில மாக்குகின்றன. எங்ஙனமெனின், அவை பூமியைக்குடைந்து 4 அடி வரையுஞ் செல்வதால் அதுவரையுள்ள பூமியின் மேற்பாகம் உழுதநிலம்போல வாகின்றது. தவிரவும் அவைகளால் அருந்தப்படும் சருகுமுதலியவைகள் நமது நிலத்திற்கு உரமாக வெளிப்படுகின்றன. இன்னனம் கேவலமாக நினைக்கப்பட்ட அற்ப நிலப்பூச்சியும் ஒரு அரிய பெரிய நன்றியைச் செய்கிறது. மேற்சொல்லிய யாவும் யாதாமொரு கைம்மாறும் நம்மிடத்தில் விரும்புகின்றனவா? இல்லை, யில்லை. இவை இவ்வாறிருக்க, மனித

னே, சுயநயத்தையே கருதுபவனு யிருக்கின்றான். மின் சக்தி, ஆகர்ஷணசக்தி, உஷ்ண சக்தி, பிரகாசம், வான், கடல் முதலிய யாவும் "தன்னயங்கருதலைத் தவிர்ப்பாயாக" என்று மனிதனுக்கு உபதேசிக்கின்றன. இது நிற்க.

தேச சரித்திரங்களைப் பார்ப்போம். சுதேசாபிமானிகள், யுத்தவீரர்கள், சன்மார்க்கபோதகர்கள், இவர்களுடைய சரிதைகள் நமக்கு என்ன போதிக்கின்றன? சுயநயந் துறப்பானன்றோ? அதாவது பிறர் நயத்தின் பொருட்டே நாம் வசித்தலும் இறத்தலும் வேண்டுமென்பதல்லவா? சக்கியமாமுனிவர் நிர்வாணத்தி னுண்மையை உணர்ந்தபின்னரும் அகங்கார முதலிய துர்க்குணங்கள் நிறைந்த இவ்வுலகிற்கு ஏன் திரும்பி வந்து வசித்தார்? பிறர்பொருட்டன்றோ? இயேசுகிறிஸ்து, மகமதுநபி, ஸ்ரீகிருஷ்ணன் இவர்களுடைய ஜீவிய சரித்திரத்தின் ரகசியந்தானென்ன? கடவுளுக்காகவும், ஜீவர்களுக்காகவும் ஒவ்வொருவரும் தம்நயத்தைத் துறக்கவேண்டு மென்பதன்றோ?

உலகமுண்டானது முதல் இயற்கைப் பொருள்களும், அறிவுண்டானவைகளும் தன்னயந்துறக்கப் போதித்து வந்தும் அதனை யோர்ந்துணராத கடின சித்தமுடைய மனிதர்களைப் பார்க்க மிகவும் வருத்தமாயிருக்கின்றது. மதாபிமானிகளும், சுதேசாபிமானிகளும் இதற்காகவா தங்கள் இரத்தத்தைச் சிந்தி உலகத்திற்குச்சாயமேற்றி யிருக்கிறார்கள்! இதற்காகவா யுத்தவீரர்களெல்லாம் தங்களுயிரைப் போர்க்களத்தில் மாய்த்தார்கள்! ஐயோ! உலகமானது நாளுக்கு நாள், கபடமாகிய நாகரிகத்திலும், நிரீச்சுரவாதத்திலும், நிர்த்தயையிலும், விர்த்தியாகி, சுயநய நாட்டத்தை வளர்த்து வருகின்றதே! பாவத்துளெல்லாம் பாவம் தன்னயங் கருதுதலேயாம். நம்மைப்பற்றி நாமே அதிக மேன்மையாய் நினைத்துக் கொள்ளும் போதுதான் நம்மிடத்தில் காமக் குரோதாதிகள் தலையெடுக்கின்றன. இன்னும், நம்மைப்பற்றி நாமே அதிக உயர்வான அபிப்பிராய முடையவரா யிருக்கும்போதுதான் நமது வாக்கினின்றும் நிந்தையான வார்த்தைகள் புறப்படுகின்றன.

சமயம், மோக்ஷம், சன்மார்க்கம், தெய்வசற்பனை என்பவைகளைப் பற்றிப் பலர் பேசுகின்றார்களே; அவையாவு மென்னபோதிக்கின்றன? மற்றவர்க்காக தன்னயந் துறப்பா னன்றோ? இஃதில்லாவிட்டால் சமயமென்பது வேடிக்கைவிளையாட்டாயும், மோக்ஷமென்பது சொல் மாத்திரமாயும், சன்மார்க்கம், தெய்வசற்பனை யென்பன நாடகமாயுமே அமையும். சுயநயத்தைத் துறவாமல் எண்ணிறந்த அநுஷ்டானங்களையும், பிராயச்சித்தமான சடங்குகளையும் தவறின்றிச் செய்து முடித்தாலு மென்ன பயன்? பிரதிதினமும் ஆலயங்களுக்குப் போய் வந்தாலுமென்? சுயநயமென்னும் அழுக்கு அணுவளவேனு மிருதயத்தில் தங்குமாயின் நமக்கும் கடவுள்இராஜ்யத்திற்கும் அதிகதூரம்—மிகவும் அதிகதூரம்.

உலகத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், நன்மையையும் வேரோடு களையத்தக்க கொடிய பாவமாகிய சுயநய நாட்டத்தைத் தவிர்க்க வல்ல சமயமே மெய்ச்சமயம். தற்காலத்திலுள்ள சமயங்களிற்பல, இம்மேலான உண்மையை ஜனங்களுக்குப் போதிப்பதிற் சித்தத்தை யெடுக்காததினாலேயே உலகத்தில் துன்பமும், வறுமையும் குடிகொண்டிருக்கின்றன.

ஆகலின், இதுமுதல் சமயம், மோக்ஷம், சன்மார்க்க மென்பனவெல்லாம் தன்னயந்தவிர்த்து, பிறர் நயந்தழுவி மற்றவர்நிமித்தமே வாழவும், இறக்கவும் துணிந்து

இத்திலில் நமது கடமையைச் செலுத்திச் சுகம்பெறுவதுடன் பரத்திலும் பேரானந்த மடைந்துய்தலே யெனதுவேரமாக. எம். கிருஷ்ணசுவாமிமுதலியார்.

THE SAIVA SIDDHANTHAM.

சைவசித்தாந்தம்.

*பதிபசுபாசத்தொகை.

(159-ம் பக்கத்தொடர்ச்சி)

"சடமாயை தானே சமையா தனுவுங்
கடவுடரு வான்வினையைக் கண்டு"

இது இறைவனது சருவஞ்ஞத்துவத்தை உணர்த்துகின்றது.

(பதவுரை) மாயை=மாயாமலமானது; சடம்=அசித்துப்பொருள்; தனுவும்=அம்மாயையைமுதற்காரணமாய்க்கொண்ட உருவமும்; தானே=இயல்பாக; சமையா=உண்டாகமாட்டாது; வினையைக்கண்டு=ஆன்மாக்களின் கன்மத்திற் கேற்ப அறிந்து; கடவுள்=சருவஞ்ஞனாகிய பரமனும்; தருவன்=ஆன்மாக்களுக்குத் தேகங்களைக் கொடுப்பன். (எ-று)

ஜனனமரண சாகரங்களில் விழுந்து தத்தளித்து வரும் இவ்வான்மாவை பக்குவமுறுவித்து முத்திவீட்டின் கண் இருத்துங் கருணை மேவீட்டினுலே, ஆன்மாவிற்கு இன்னவினையை முன்னும், இன்னவினையை அதன் பின்னும் சோபான முறையாய்க் கூட்டிவைத்தால் அவ்வான்மா பக்குவமுறும் என்று அறியுஞ்சக்தி முற்றறிவன் ஒருவனுக்கே சாலும் என்பதை இது தெரிக்கின்றது. வினையை அநுபவிக்கச் செய்தல் அவ்வான்மாவைத் தேகத்தோடு கூட்டினுலன்றி முடியாததலால் முதற்காரணமாகிய மாயையினின்றும், இறைவனும் குலாலனைப் போல் உருவமைப்பானுயினன். மேலும் அம்மாயை நித்தமாய், அருவாய் உள்ளது. சருவசங்காரகாலத்தில் இவ்வுலகெல்லாம் அதனிடத்தொடுங்கி, மீளவும் அதினின்றும் புனருற்பவமுறும். இது ஆன்மாவிற்குச் சிறிது அறிவை விளக்கும். இது சுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, அசுத்தமாயை என முத்திறப்பட்டு நிற்கும். இவைகளினின்றும் ஆன்மதத்துவம் 24-ம் வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் உண்டாம். மீண்டுங் தோற்றியவாறே ஒடுங்கும். இதன் பரப்பை யெலலாம் சித்தியார் முதலிய உண்மை நூல்களுள் உணர்ந்து கொள்க.

"வருத்திய னல்லன் மருத்துவனோ யர்க்கு
திருத்தனையிவ் வாறுநினை நீ"

இது இறைவனது பேரருளை உணர்த்துகின்றது.

(ப-ரை) நோயர்க்கு=பிணியாளருக்கு; மருத்துவன்=சிகிச்சை செய்யும் வைத்தியன்; வருத்தியனல்லன்=துன்பப் படுத்தினவனாக மாட்டான்; திருத்தனை=பஞ்சகிருத்தியங்களைச் செய்யுஞ் சிவபிரானை; இவ்வாறு=மேற்கூறிய வைத்தியனைப்போலவே; நினை=என்னுவாயாக. (எ-று)

*சைவசித்தாந்த சஞ்சிகையின் 157ம் பக்கத்தில் 23ம்வரியில் 'பிரளயாகலர்=ஆணவம், கன்மம் என்னும் இருமல முடையார்' எனவும், 'சகலர்=ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுடையார்' எனவும் திருத்தியுஞ் சேர்த்தும் வாசித்துக்கொள்க.

இவ்வுலகத்தின் கண்ணுள்ள மருத்துவர் சூரியபுடமென னடைதப் பிரயோகஞ் செய்தல் முதலிய வைகளால் சில வியாதிகளையும், மருந்துடன் சருக்கரை சேர்த்துக் கொடுத்துச் சில வியாதிகளையும் தீர்ப்பர். அதுபோல இறைவனும் ஆணவமலநோயால் வருந்தும் ஆன்மாக்களைத் தமது திரோதான சத்தியால் பக்குவம் வருவித்தற் பொருட்டு, அவைகளுக்கு இன்ப துன்பங்களை நுகர்விப்பன், நினையத்துமிலவன். இது வைத்திய நாதனாகிய சிவபெருமான் உயிர்கள் மாட்டுவைத்த கருணையின் நிகழ்ச்சியே யன்றி வேறன்று.

வைத்தியன் = தொழிலால் வரு பெயர்.

"உதவி யிரவி யுலகுக் கிரவிக்
குதவி செயுமோ வுலகு"

இது இறைவனது முடிவிலாற்றலை உணர்த்துகின்றது.

(ப-ரை) உலகுக்கு = இப்பிரபஞ்சத்திற்கு; இரவி = சூரியன்; உதவி = பிரயோஜனகரமாய்ப் பொருந்தவன்; இரவிக்கு = அப்படிப் பயனுதவிக்குஞ் சூரியனுக்கு; உலகு = இவ்வுலகமானது; உதவிசெயுமோ = கைமாறாகிய பிரயோஜனத்தைச் செய்யத் தக்கதோ? செய்யும் ஆற்றலுடையதன்று. (எ-று)

இவ்வுலகத்தின் கண்ணே தன்னிய புறவிருள் கெடும்படி தோன்றி, ஆன்மாக்களை யெல்லாந் தத்தம் செயல்களில் நிறுத்தி நுகர்வித்தற்கு ஓர்காரணமாயுள்ள சூரியனுக்கு இவ்வுலகம் எவ்வாற்றானுங் கைமாறளித்தற் கியலாத்தன்மைபோல, அஞ்ஞானத்தை விளைவிக்கும் ஆணவமல சத்தியைத் திருவருளாற் கெடுத்துப் பேரின்பமாகிய சிவாநுபவத்தை விளைவிக்கும் ஞானசூரியனாகிய முதல்வனுக்கு, தோன்றிநின்று அழியுந்தன்மையதான மாயாதேகத்திற் கட்டுண்ட அற்ப அறிவுடைய இவ்வான்மாக்கள் செய்தற்குரிய கைமாறென்னை? ஒன்றுமின்று. இறைவனும் "வேண்டல், வேண்டாமை" என்னும் தன்மைகளை உடையனல்லாத விழுச்செல்வனாதலால் அவன் ஆன்மாக்களின் உதவியை எதிர்பார்த்து நிற்றற்கோர் இயைபின்மையு மறிக.

ஓகாரம் ஈண்டு எதிர்மறைக்கண் வந்தது.

பதியியல் முற்றிற்று. ஆகச் செய்யுள் 13.

இரண்டாவது.

பசுவியல்.

முறையானே முதற்கண் பதியியல் கூறிப் பின்னர் பசுவியல் கூறுகின்றார்.

"ஆகஞ் சடந்தா னியங்கா ததனையா
பாசன் பசுப்பலந்துய்ப் பான்"

இது பசுவினது உண்மை யுணர்த்துகின்றது.

(ப-ரை) ஆகம் = தேகமானது; சடம் = அசித்துப் பொருள்; தான் இயங்காது = (ஆதலால் அவ்வுடல்) தானே தொழிற்படாது; அதனை = அவ்வுடலைப் பொருந்திநின்று; ஆபாசவபசு = திறக்கேடனாகிய ஆன்மா; பவந்துய்ப்பான் = இன்பதுன்பங்களை அநுபவிப்பான் (எ-று)

பஞ்சபூதங்களுஞ் சடமாகையால் அவைகளின் சேர்க்கையாலாகிய தேகமுஞ் சடமேயாயிற்று. சடப்பொருள்கள்தாமே இயங்கும் வன்மையின்றி இயக்குவித்தால் இயக்கும் வன்மையுடையன. ஆகவே, இவ்வுடல் இயங்குகின்றமையாலும், இச்சாஞானக்கிரியை அதன்கண் நிகழ்தலாலும், அதனுள் நின்று இயக்குவான் ஒருவனுளன்"

அவனே ஆன்மா. அவனே இவ்வுடலின்கண் பொருந்தியது, இன்பதுன்ப மென்னும் இருவினைகளையும் நுகர்வித்து பக்குவம் உறுவித்தற்கேயாம். ஆதலால் அங்ஙனம் நுகர்வானுயினுன்.

ஆபாசன் = போலித்தன்மை யுடையோன், நிறக்கேடன்.

"பொறியு முயிரல்லப் பொறையுடலு மல்ல
வறிவே யுயிரொன் றறி"

இது பசுவின் தன்மையை உணர்த்துகின்றது.

(ப-ரை) பொறியுமுயிரல்ல = ஐம்பொறிகளும் ஆன்மா வாகா; பொறையுடலுமல்ல = உயிர்தாங்கிச் செல்லுதற்குரிய தேகமும் உயிராகாது; (ஆதலால்) அறிவே = தேகத்தின்கண்ணின்று பொறிவழியால் ஐம்புலன்களையும் அறியும் அறிவே; உயிரென்று = ஆன்மாவென்று; அறி = அறிவாயாக. (எ-று)

ஐம்பொறிகளுள், ஒன்றறிந்தபின் பொன்றறியும். ஒன்றறிந்த தொன்றறியா து. ஆகையால் இவ்வைந்தையுங் கருவியாய்க் கொண்டு, ஞானம் கிரியை இச்சை இவைகளோடு பொருந்தி அறிவது எதுவோ அதுவே ஆன்மாவன்றி, ஐம்பொறிகளல்ல வென்று உணர்த்தும் பொருட்டு "பொறியுமுயிரல்ல" என்ருர்.

இவ்வுடல் சவமானபோது அவயவங்களிற் குறைபாடின்றிக் கிடந்தும் அதில் அறிவு நிகழாமையால் அதுவும் உயிரன்று, எனக்கூறினுர். பொறிஐந்து:-மெய், வாய் கண், மூக்கு, செவி என்பவைகளே. புலன்ஐந்து:-சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்பவைகளே. இனம் பற்றி அந்தக்கரணம், பிராணவாயு முதலியவைகளும் உயிரல்ல வெனக் கொள்ளப்படும்.

"உறக்கத் துணரா வுடலும் பொறியு
முறக்கமு மோரு முயிர்"

இது ஆன்மா அவத்தைக் கண்ணும் அறியுமென உணர்த்துகின்றது.

(ப-ரை) உடலும் = தேகமும்; பொறியும் = ஐம்பொறிகளும்; உறக்கத்து = நித்திரையில்; உணரா = அறியும் வலியுடையனவன்று; (ஆனுல்) உயிர் = ஆன்மா; உறக்கமும் = நித்திரையையும்; ஓரும் = அறியும், (எ-று)

"உறக்கமும் ஒருமுயிர்" என்றது விழித்தபின் சுகமாய்த் தூங்கினதான உணர்வு நிகழ்தலைப்பற்றி யென்க. உடலின்கண் யாதொரு குறைபாடுமின்றிக் கிடக்கும் உறக்கத்தின் மூர்க்கப்பாம்பு அவ்வுடலின் மேலேறிய மதனை யறியாத் தன்மையால், அவ்வுடல் உணருந் தன்மையதன்று. நித்திரையின்கண் உடலினிடத்தே ஐம்பொறிகள் பொருந்த நின்றும் அவைகள் அறியாத்தன்மையால் "உறக்கத்துணரா பொறியும்" என்ருர்.

அவத்தை = நிலைமை, அது ஐந்து வகைப்படும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. இவ் வவத்தையின் விரிவை சித்தியாருட் கண்டுணர்க.

"புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபா வத்தாலு
நண்ணுமுயிர் மேல்கீழ் நடு"

இஃது ஆன்மா செய்யும் வினைதுகர்தற்கு அடையும் உலகம் உணர்த்துகின்றது.

(ப-ரை) உயிர் = ஆன்மாவானது; புண்ணியத்தால் = நற்கருமப்பயனுல்; மேல் நண்ணும் = சுவர்க்க லோகத்தை யடையும்; பாவத்தால் = அசற்கருமப் பயனுல்; கீழ்

நண்ணும் = நரகத்திற்சேரும்; புண்ணியபாவத்தாலும் = நல்வினை தீவினையின் பயனாகிய புண்ணியபாவமென்னும் இருதொடர்பாலும்; மன்னும் = மன்னுகின்றதாகி இவ்வுலகத்தைப் பொருந்தும், (எ-று)"

வேதாகமம் விதித்தன செய்தலும், விலக்கியன செய்யா தொழிதலுமே புண்ணியம். இவற்றின் மறுதலையே பாவம். குறித்தகாலம் வரை இன்பதுன்பம் அநுபவித்தற்குரிய இவ்வுலகத்தை யாம் காண்கையால் அவ்வாறு இன்பமே அநுபவித்தற்குரிய சுவர்க்கமும், துன்பமே அநுபவித்தற் குரிய நிரயமும் உண்டென அநுமிக்கப்படும். நல்வினை தீவினைகள் முறையே பொன்விலங்கு, இருப்புவிலங்குகளுக்குச் சமம் என்றும் சுவர்க்க நரகம் காரா கிரகத்துக்குச் சமமென்றும் உண்மை நூல்கள் கூறுகின்றன. இவைகளின் அசர்ச்சி நுகர்ந்தவாறே மீண்டும் பிறத்தல் வேண்டும். உண்மை ஞானமுடையோர் சுவர்க்கபதவியையும் மற்றையமேலான பதவிகளையும் விரும்பாது என்றும் மீளா முத்தியையே எய்தத்தலைப்படுவர்.

பசுவியல் முற்றிற்று. ஆகச்செய்யுள் 17

(இன்னும் வரும்)

S. பால்வண்ணமுதலியார்.

SREE PARAMAHAMSA SIVA NARAYANA SWAMI'S TRAVELS.

ஸ்ரீ பரமஹம்ஸ சிவநாராயண சுவாமிகள்.

அப்பால் சிவநாராயணர் பத்மநதிக்கரையில் மனுஷ சஞ்சாரமில்லாத ஓரிடத்தில் நிர்ச்சலனாயிருந்து ஈசனையே தியானித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் அந்நதியின் ஜலத்தைத் தவிர வேறொன்றையும் உட்கொள்வதில்லை. இதை அதிசீக்கிரமா யறிந்து பழயஎஜமானாகிய தேவிநாத் என்பவர் தமது குற்றத்தை யுணர்ந்தவராய், சிவநாராயணரை உடனேபோய்த் தெரிசனஞ்செய்ய வேண்டுமென்றெண்ணித் தன்னுடன் சில பண்டிதர்களையும் கூட்டிக்கொண்டு சுவாமிகளிடத்திற்கு விரைவாய்ப் போய்ச்சேர்ந்தார். போனவுடன் அவர்களெல்லாரும் சுவாமிகளை நமஸ்கரித்து "தாங்களிவ்விதம் போஜனம் செய்யாமலிருப்பது நியாயமல்ல. தாங்களெங்களுடன் வந்து போஜனம் செய்யவேண்டும். அல்லது உத்தரவு கொடுத்தால் இவ்விடத்திற்கே போஜனம் கொண்டுவந்து விடுகிறோம்" என்று சொல்ல, சுவாமிகள் சற்றேனும் சவனிக்காமல் மௌனமாயிருந்து விட்டார்கள். பின்னரும் பண்டிதர்கள் "சுவாமி! தாங்கள் அன்ன ஆகாரமின்றி வீற்றிருத்தல் தகுதியன்றே, சாஸ்திரயுக்தமுமல்லவே" என்று தங்களுடைய சாஸ்திரங்களிலுள்ள மேற்கோள்களை யெல்லாம் சொல்லியும் பிரயோஜன மின்மைகண்டு, வியாபாரிகளும் பண்டிதர்களும் தத்தம் வழிசென்றனர். கொஞ்சக் காலத்திற்குள் அவ்வியாபாரி காலஞ்சென்றனர். சாதாரண ஜனங்கள் அவரிறந்தமைக்குக் காரணம் சிவநாராயண சுவாமிகளுடைய சாபமென்றே சொல்லிக்கொண்டார்கள். அதனால் சுவாமிகளும் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப் போக நிச்சயித்தனர்.

அதற்கப்பால் சில குக்கிராமங்களிற் சென்று எதார்த்த ஞானத்தை போதித்துக் கொண்டு வந்தார். அதனால் பல ஜனங்களுக்குப் பயன்பட ஏதுவில்லாம லிருந்தமைக்

கண்டு ஒரு பெரிய ராஜன் அல்லது வித்துவானை யடுத்தால் நமது காரியம் நிறைவேறிவிடும். ஆனால் பொதுவாய் அரசர்கள், வித்துவான்கள் இவர்களுடைய மனமும் சாதாரண ஜனங்களுடைய மனதைப்போலவே இருக்கின்றது. அவரும் சன்மார்க்க நெறியில் பிரவர்த்தித்து எதார்த்தத்தை யுணர முயல்வது அரிதன்றே. ஆயினும் "முயற்சிகூலி தரும்" என்று தமக்குள்ளே சிந்தனை செய்துகொண்டு அநேகபண்டிதர்களை யாதரிப்பவரும் அரசர்கூட்டத்திற் சிறந்தவருமாகிய காசி ராஜாவிடம் சென்று தங்கள் கருத்தை வெளியிடத் தீர்மானித்துக் கொண்டனர். இது நிற்க,

இவர்கள் ராம்பூர் போலியா வென்னும் ஊரிலிருக்கும்போது அங்கு நடந்தவொரு சமாசாரத்தை யெடுத்துரைக்க வேண்டியது அவசியமாகத்தோன்றுகிறது. மேற்சொன்ன ஊரில் பாரதி முறைமையிற் சேர்ந்த சன்னியாசிகளுக்குப் பாத்தியப்பட்ட கோவில் ஒன்றுண்டு. அக்கோவிலினுள்ளே மூலஸ்தானத்தில் விளங்கும் விக்கிரகத்தினருகே இரண்டு சன்னியாசிகள் உட்கார்ந்து கொண்டு சாஸ்திர விசாரணை செய்து வந்தார்கள். அவ்விருவரி லொருவர் காசியா நகரத்தைச் சேர்ந்தவர்; மற்றொருவர் காசிப்பூர் பட்டணத்தி லிருந்து வந்தவர். இவ்விருவரும் சாஸ்திர ஆராய்ச்சி செய்து வருங்கால் ஒரு நாள் இருவருக்கு முண்டான சம்பாஷணையில் காசி வித்துவான் காசிப்பூர் பண்டிதரைப்பார்த்து "பண்டிதரே! நீர்இப்போது சொல்லிய வார்த்தை யொன்று இலக்கணத்திற்கு ஒவ்வாதது, தப்பித"மென்று குற்றஞ்சாட்டினர். இதைக்கேட்ட பண்டிதர் கோபங்கொண்டு "என்ன சொன்னாய்? நான் சொல்லும் வார்த்தை தப்பிதமென்று உச்சரிக்க யோக்கியதை யுடையவன் நீ தானா? நல்லதிருக்கட்டும், வேண்டுமானால் இருபத்தைந்து ரூபாய் நமக்குள் பந்தயம் வைத்துக் கொள்வோம். நாமிருவரும் காசிக்குச்சென்று அங்குள்ள பண்டிதர் மாசபையில் நமது விவாதத்தைத் தீர்த்துக் கொள்வோம்" என்றனர். அதற்குக் காசிவித்துவான் "ஏனடா தாறுமாறாய்ப் பேசுகின்றனை? இருபத்தைந்து காசுக்குக்கூட வழியற்ற நீயா இருபத்தைந்து ரூபாய் பந்தயம் கொடுக்கப்போகின்றாய். போடா, முட்டாள்! வேண்டுமானால் ஐந்து ரூபாய் பந்தயம் வைத்துக்கொள்வோம் புறப்படு" என்றார். இவ்விதமாக ஒருவரை யொருவர் வார்த்தை வித்தியாசம் பேசவே கைக்கலகம் விளைந்துவிட்டது.

காசிப்பூர் பண்டிதர் மல்யுத்தத்தில் தேர்ந்தவராகையால் சீக்கிரமாய்த்தன்னுடைய எதிரியைக் கீழே தள்ளி அவருடைய மார்பின் பேரில் உட்கார்ந்து கொண்டு "அடா! மூடா! இனியாகிலும் மரியாதையாய்ப் பேசுவாயா? இப்போது உனக்குப்புத்தி வந்ததா?" என்று உறக்கக்கூவினார். இவ்விதமாக இருவரும் சண்டைபோட்டுக் கொண்டிருந்ததில் மூலஸ்தானத்தில் வைத்திருந்த சிவலிங்கங்கள் தள்ளப்பட்டு, பூமியில் விழுந்தன. அங்ஙனம் விழுந்தமை அச்சிவலிங்கங்களும பூமாதேவியின் பொறுமையை மெச்சி "பூமகளே! இம்மகாத்மாக்களையும் தாங்குவதும் நினது பொறுமையே பொறுமை. உன்னை நாங்கள் நமஸ்கரிக்கின்றோம்." என்றதுபோல் தோன்றின. இவ்வாறாக இவர்கள் சண்டைபோட்டதையும், சிவலிங்கங்களைக் கீழே தள்ளிவிட்டதையும் கண்ட அக்கோவில் பூசாரி கோபாவேசராய் "அடா! நீசப்பயல்களே! சண்டாளர்களே! நீங்களிருவரும் கோவிலுக்குள் சண்டை போட்டது மன்றி, சுவாமியையும் தள்ளி விட்டீர்களே! உங்களை என்கையிலிருக்கும் இத்தடியால் நொறுங்கப்புடைத்தாலென்ன?" என்று தடியை யோங்கினார். இருவர்களும் நடுநடுங்கிச் சண்டை யினின்றும் விலகினர்.

அப்போது அங்கு நின்ற சிவநாராயணர் பண்டிதரிருவரையும் வெளியே யழைத்

அ "ஐயன்மீர்! சாஸ்திரவிவகாரஞ் செய்வோராகிய நீங்கள் இவ்வண்ணங் கலகஞ் செய்வது தகுதியாகுமா? நல்லது, இக்கலகத்திற்குக் காரணந்தான் என்ன? ஒருவார்த்தை இலக்கணப்பொருத்த மாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவ்வார்த்தையால் குறிக்கப்படும் பொருள் ஈதென்பது இருவர்கட்கும் நன்கு விளங்குமாயின் அவ்வார்த்தையைப்பற்றி விவகரிப்பதால் பயன் யாது? ஜலத்தை ஜலமென்று சொன்னாலென்ன? தண்ணீரென்று சொன்னாலென்ன? பதத்தால் குறிக்கப்படும்பொருள் இது தானென்று தெரிந்த பிற்பாடும் அப்பதம் இலக்கணத்திற்குப் பொருத்தமா? தமிழ்ப்பதமா? சமஸ்கிருதமா? என்றுதர்க்கிப்பதில் யாதுபிரயோசனம்? இவ்வார்த்தைகளால் உண்டாகும் வீண் தர்க்கங்களுக்கு இடங்கொடாது அவைகளால் குறிக்கப்படும் பொருள்களையிட்டே கவனித்தல் உசிதமாகும். ஆதலால் எத்தர்த்த மின்ன தென்பதை யறிந்து, மானிடர்கள் ஒவ்வொருவரும் இகபரசுகத்தை யடைவதற்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை யுணர்ந்து, அதற்கொப்ப வொழுகி, நித்தியானந்தப் பெருவாழ்வை யடைய வேண்டும்" என்று பலவாறாகப் போதிக்க, பண்டித சிகாமணிகளும் வெட்கித் தலைகுனிந்து சிவநாராயணருக்கு வந்தனம் செய்து தத்தமிடமேகினர்.

(இன்னும் வரும்)

C. P. சுப்பையாபிள்ளை. B. A.

THE EXPOSITION OF KNOWLEDGE.

அறிவுவிளக்கம்.

(162-ம் பக்கத்தொடர்ச்சி)

அன்றிரவில் கடோற்கஜனை மந்திரி பார்த்து "நின் குமாரனுடைய கல்வித்திறம் குணகுணம், எப்பேர்ப்பட்டது சொல்லுமின்" என்ன, அவனும் "ஐயா! அமைச்சரே! எனது குமாரன் எழுதுவதில் இருகையுமிலான், வாசிக்குந்திறத்திலோ மழலைச்சொற் கூறத் திறனற்ற அதிபாலருக்குச் சரியானவன். குணத்திலோ, சுயபுத்திக்குறைவும் பிறர்புத்திபேலாததில நிறைவுமுள்ளவன். எழுத்துப்பார்க்க பார்வைஞானங்குறைந்த கண்ணுடையான்" என்றனன். மந்திரி புன்னகை கொண்டு "உலக்கைக்கொழுந்துக்கு நிகரான புத்தியுடைய நின்புதல்வனை ஒரு வருஷகாலம் என்னிடம் ஒப்புவித்தால், யான் சீர்திருத்தித் தருவேன்" என்றார். அதற்குக்கடோற்கஜனும் சம்மதித்தான். மந்திரியும் அவனிடம் உடன்படிக்கை செய்துகொண்டு, அவனுக்கு வேண்டிய பொருள் கொடுத்து, பின்பு சில பரிசுதருவதாக வாக்களித்து, குண்டோதரனை உடன்கொண்டு சென்று, ஊர் சேர்ந்து தன் வீட்டின் மேன்மாடத்தில் அவனை இருக்கச்செய்து, அவனுக்குப்பணிவிடைக்காரனை ஏற்படுத்தினர். அக்குண்டோதரனுக்கு ஸ்நானபானம் செய்வித்து நாள்தோறும் சுகவுண்டி யளித்துவந்தனர். அவன் தேகம் சிவந்த மேனியுற்று அதில் ரிஷிகளின் தேகத்திற்போல் மயிர் வளர்ந்தது. சின்னாட் சென்றபின் மந்திரி அவனுக்குச் சில விஷயங்கள் போதிக்க ஆரம்பித்தார். எப்படியெனில் குண்டோதரனை தவசிபோல் கண்ணை மூடிக்கொண்டு, நிர்வாணியாய் பத்மாசனமபோட்டு உட்காரச்செய்து, மந்திரி ஊசியால் அவன் சரீரத்திற்குத்திக் குத்தி, அவன் அசையாதிருக்கும்படி பழக்கினர்.

பிறகு விபூதி ருத்திராட்சம் தரிப்பித்து, அவனுடைய சர்வாங்கத்திலுள்ள ரோ

மத்தைப் பிடிக்க அவன் சலியாதிருக்கும்படி மந்திரி கற்பித்தார். இப்படி முடிவுபெற ஐந்து மாதமாயிற்று, மந்திரி குண்டோதர சுவாமியை நித்தியானந்தரென்று மதித்தவர்போல் நடித்து, பயபக்தி விநயத்துடன் அவரைத் தினம் பணிவாராயினர். மந்திரியவரவர் தன் ஊருக்கு அடுத்த மலையில் அப்போலிச் சுவாமியை நிர்வாண சந்நியாசி வேடந்தரிப்பிக்கச் செய்து அம்மலையில் இரண்டு மூன்று சிஷியர்களுடன் வாசஞ்செய்யும்படி திட்டஞ்செய்தார். பின்னர் அவர் தினந்தோறும் அம்மலைக்குப்போய் அப்போலிச்சுவாமியை வணங்கித் தோத்திரஞ்செய்து வந்தனர். இச்செய்தி ஊரெங்கும் பரவிற்று. சிலபேர் இராஜனிடம் சென்று "நம்மூரடுத்த மலையில் யாரோ ஒரு மகாரிஷி வந்திறங்கி இருக்கிறார். அவரைத் தங்களுடைய முதல் மந்திரி தினந்தோறும் போய்ச் சேவித்து வருகிறார்" என்று தெரிவித்தார்கள். இராஜன் முதல் மந்திரி ஊர்வந்து சேர்ந்த சங்கதி கேட்டு சந்தோஷமுற்று, அவரை வரவழைத்து வினவினர். அப்போது மந்திரி உடல்பதைக்கவும் கண்ணீர்ததும்பவும் நின்று, அரசனை நோக்கி "ஐயனே அம்மலையிலுள்ள மகாரிஷியின் பிரதாபத்தை ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலும் சொல்லமுடியாது. அச்சந்நியாசி அசைவற்ற சமாதியில் சதாவிருந்து கொண்டிருக்கிறார். அவரைச் சுற்றி அக்கினிச்சுவாலை வீசின வண்ணமிருக்கிறது. ஸ்தோத்திரம் செய்து அவரை அணுகினால் அக்கினிச்சுவாலை குறைந்து வரும். அத்தருணத்தில் அந்த ரிஷியை அணுகிச் சேவிக்கலாம்" என்றார். இராஜன் பரவசமுற்று, அப்பெரியவரைச் சேவிக்க ஆவலுடையவராய், ஒருநாள் குறிப்பிட்டு, நகரத்தை அலங்காரஞ் செய்வித்து, புறதேசத்து மன்னர்களைத் தருவித்து, தன் தேசத்தில் வசிக்கும் பிரபுக்களுக்கும் குடிகளுக்கும் அறிக்கைப்பத்திரிகை அனுப்பினார். அக்குறிப்பிட்ட நாளில் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, ரத கஜ துரக பதாதிகளுடன் மலையடிவாரஞ் சேர்ந்தனர். பின்பு மலையடிவாரத்திலுள்ள ஊற்றுக்குழியில் ஸ்நானம் செய்து, மந்திரி முன்னும் அவர் பின் அரசனும் மற்றவர் ஒருவர் பின் ஒருவராகவும் மலை மீது சென்றனர். மந்திரி பின் வருபவர்களைத் தூரத்தில் நிறுத்தி, தான் மாத்திரம் பெரியவர் வேடம் பூண்ட சுவாமியினிடம் சென்றனர். அச்சுவாமியினிடம் அக்கினிச்சுவாலை வீசுகிறதென்றும் நெருங்கக் கஷ்டமாயிருக்கிறதென்றும் நடித்துக்காட்டி, துதிசெய்தார். உடனே சுவாலை தணிந்ததாக மாரீசம் செய்து அருகில் நெருங்கி, சுவாமியை மந்திரி பிரதட்சணம் செய்து, அச்சுவாமியின் நிர்வாண சரீரத்திலுள்ள ரோமத்தி லொன்றைப்பிடுங்கி, விபூதி மடலில் போட்டு, விபூதியோடு எடுத்துச் சிரசிலணிந்துகொண்டு தூரத்தில் வந்து நின்றார். உடனே இதைக்கண்ட அரசன் அச்சுவாமி மூடினகண் மூடினபடி அசையாமலிருப்பதையும், மந்திரி செய்தகாரியத்தையும் பார்த்துச் சந்தோஷித்தார். தானும் அவ்வாறே செய்து தூரப்போய் நின்றார். பிறகு சிற்றரசர்களும், பிரபுக்களும் குடிகளும் அவ்வாறே செய்து முடித்தனர். மயிர்வினைஞனுக்கு வேலை குறைவாச்சுது. பிறகு எல்லோரும் ஒருங்கு சேர்ந்து மலையை விட்டு இறங்கி அவரவர் இருப்பிடம் சேர்ந்தனர். பின்னர் மந்திரி அப்போலிச் சுவாமியை ரகசியமாய்த் தன் வீட்டிற்கு அழைத்துப்போனார். மந்திரி ஏழாவது மாதம் முதல் திகதியில் ராஜசமுகம் போய் "ஜனமருளோ? ஜாதிமருளோ?" என்னும் வாக்கியத்திற்குவிடைசொல்லத்தான்தயாராயிருப்பதாகவும், அதனை கேட்பதற்கு ஒருநாள் குறிக்கும்படிக்கும் ராஜனுக்குத்தெரிவித்தார். ராஜன் அவ்வண்ணமே நாள் குறிப்பிட்டு, சபை சேர்த்து அதன் அர்த்தத்தை விளக்கும்படி மந்திரிக்கு ஆக்ஞாபித்தார். மந்திரியானவர் "மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்" என்பதை யுணர்ந்தவ ராகையால் தான் கூறவிருப்பதில் குற்றமுள

தேசம் ராஜதெண்டனை நேராதிருக்கும்படி ராஜனிடம் வாக்குத்தத்தம் பெற்று அதன் பொருளை விளக்க ஆரம்பித்தார். தான் எப்படி ரஹசியமாய்க் காரியங்களை முடித்தனனோ அதைச் சபையறியச்சொல்லி, ஜனங்களுடைய பிரஜையினால் கூட்டங்கூடுவார்களேயன்றி, உண்மையையுணர்தல் எளிதல்லவென்றும் "ஜனமருளோ? ஜாத்திரைமருளோ?" என்னும் பழமொழி இவ்வுண்மையைக் குறிப்பிப்பதொன்றென்றும் மந்திரியானவர் இராஜனுக்கு எடுத்துக்காட்டி, அதனைத் தன் சொற்படியாமல் நடத்தவந்த குருடோதரனுக்கு ஏதாவது வெகுமானம் செய்யவேண்டுமென்று இரந்து கொள்ள, இராஜனும் மிகவும் சந்தோஷமடைந்து அவனுக்குத் திருப்தியாகும்வண்ணம் பொருள் முதலியவை உதவி அவனுடைய சுவதேசத்திற் கனுப்பி வித்தார் என்பதே. பழமைக் கிரங்கியோ பார்த்தீரோ? இதுபோலவேதான் உலகமெலாகும் பொய்வேடத்தால் மயக்குபவர் பலராதலின் டம்பப்பக்தியைப் பழகுவதில் இத்தகைய மோசங்கள் சம்பவித்திற் கிடையாகும். மேலும் அதில்மனமானது கண்டப்பொருளையே நாடுதலின், சஞ்சலமற்ற நிலையை எய்துதல் அசாத்தியம். இராகத்துவேஷங்கள் பீடிப்பதற்கும்போதுமான இடமுண்டு. ஆதலின் பக்திப் பகுதி மேலான பயனைக் கொடுக்குமென எதிர்பார்த்தல் தவறு. யான் இங்ஙனம் கூறுவதால் அதனால் சிறிதும் பயனில்லையெனக் கொள்ளற்க. சிந்தித்தும்பகுதியில்லா மூடர்க்கு அதுவே முதல் படியாம். ஆனால் மேனோக்கிச் செல்லத்தக்க கவியோகிகளிற் சிலர் அம்மட்டில் நின்றுவிடுகிறார்கள் என்பதே என் மனதைப் புண்படுத்துகின்றது.

(இன்னும்வரும்)

பு. ஜயராமபிள்ளை

HISTORY OF JATA BHARATHA.

ஜடபாரதர்சரித்திரம்.

(138-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

அப்பொழுது பத்திரகாளி யானவள் சர்வஜீவதயாபரராயும், சந்துஷ்டராயுமிருக்கின்ற ஜடபாரதரது பிரம்மதேஜசினால் தகிக்கப்பட்டவளாய், பிம்பத்தினின்றும் வெளிப்பட்டு, அந்தச்சோரர்கள் பண்ணின அபராதத்தைச் சகிக்க ஆற்றாது, மிகவும் கோபங்கொண்டு, ஜடபரதனைத் துணிப்பதற்காக ஓங்கிய கத்தியைப்பிடுங்கி, அதைக்கொண்டே அப்பாபிஷ்டர்கள் யாவரையும் சேதித்து, அவர்களுடைய கழுத்தினின்றும் பெருகாநின்ற இரத்தமாகிற மதுவைத் தனது பூதகணங்களுடன் பானம்பண்ணி அதிகச் சந்தோஷத்தை யடைந்தாள். நண்பர்களே! பார்த்தீர்களா? தேகாபிமானிக் ஆத்மபுத்தியை விட்டு சகல பிராணிகளிடத்தும் ஜீவகாருண்ணிய முடைய வராயும் பகவானுடைய பாதார விந்தங்களையே சதாஸ்மரித்துக் கொண்டு திரிபவர்களாயுமிருக்கிற அடியார்களுக்குத் துன்பம் விளைக்கக்கருதின் யாவர் தான் சகிப்பார். எப்பிராணிக்கேனும் தீங்குசெய்யப் புகுந்தாலே, அத்தீங்கு செய்யப்புகுந்தவனை விடாது பற்றுமென்னின், பெரியோர் விஷயத்தில் கேட்பானேன்.

அப்பால் ஜடபரதர் அவ்விடம் விட்டு நீங்கி, இட்சுமதி யென்கிற நதிதீரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். இவர் இங்ஙன் திரிகை, சிந்து சவீர தேசத்திற்க

திபதியாகிய ரகுகணனென்னும் அரசன் கபிலமகாரிஷி ஆசிரமத்திற்குப்போக நினைத்து சிவிகையைக்கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். அப்பொழுது பல்லக்குச்சுமக்கிறவர்களில் ஓராளைக் காணாததினால் அவரிற் சிலர் சமீபத்திலிருந்த இட்சுமதியென்னும் நதிதீரத்தில் அவனைத் தேடிச்செல்ல, ஜடபரதர் அவ்விடத்தில் நிற்பதைக்கண்ணுற்றனர்.

அவரோடுசேர்ந்த பல்லக்குக்காரனைக் காணாததினால் இவரை அவ்வேலைக்குத் தகுதியானவனெனக் கருதி, பலாத்காரமாக இழுத்துக்கொண்டு போய், தங்களோடு பல்லக்குச் சுமக்கும்படி செய்தனர். ஆனால் அம்மகானுபாவரான ஜடபரதர் தம்முடைய அடிக்குமுன்னே இரண்டு அம்பு அளவுவரைப் பூமியைப்பார்த்துக்கொண்டே நடந்தமையால் மற்றப்பேர்களுடைய கதிக்கு ஒத்துவராமல் பல்லக்குக் குலுங்கும்படி நேரிட்டது. அது அரசனுக்குத் துன்பத்தைக் கொடுக்க, அவன் சிவிகையர்களைப் பார்த்து "அடா சிவிகையர்களே! செவ்வையாய்ப் பல்லக்கை யெடுத்துக் கொண்டு போங்கள். ஏன் இத்தப்பிரகாரம் அசைகின்றது?" என்ன, சிவிகையர்கள் மிகவும்பயந்தவர்களாய் அரசனைநோக்கி "மகாராஜனே! உம்முடைய ஆக்ஞைப்பிரகாரம் நடவாநின்ற நாங்கள் உடம்பு மறந்தவர்களாய் நடக்கவில்லை. நாங்கள்செவ்வையாகவே எடுத்துக் கொண்டுபோகிறோம். ஜடபரதனைச் சுட்டிக்காட்டி இந்த ஒருவன் எங்கள் கூட நடக்கிறானில்லை. அவனால்தான் இத்தனையும் சம்பவித்தது" என்றனர். அது கேட்ட அரசன் பெரியவர்களுடனே சகவாசம்பண்ணியிருந்தாலும் ராஜசுபாவத்தை விடாமல் கோபங்கொண்டவனாய் நீறுபூத்த நெருப்பைப்போல தெரியப்படாத பிரம்மதேஜஸை யுடையவரான ஜடபரதனை நோக்கி "அப்பா! நீ என்ன செய்வாய்! மிகவும் இளைத்திருக்கின்றாய். இந்தப்பல்லக்கின் சுமையை நீ ஒருவனாக எடுக்கின்றாய்." என்றிவ்வித பரிகாச வார்த்தைகளால் கோபித்து, மற்றவர்களுடைய கதிக்கொவ்வ நடக்குமாறு அரசன் வற்புறுத்தினன். பின்னரும் பரதர் முன்போலவே நடக்க, அரசன் மிகக்கோபங்கொண்டவனாய், பரதரைப்பார்த்து "அடே! நீ என்ன பிராணனுடனே மரித்தவனாக இருக்கின்றனை. யான் கூறியவார்த்தைகளைக் கவனியாமல் அசட்டை பண்ணுகின்றனை. இனி உன்னைத் தண்டியாமல் விடேன்" என்றித்தப் பிரகாரம் கொடுவிதமான கடுஞ்சொற்களைக் கூற, பரதரும் புன்சிரிப்புக்கொண்டு அரசனை நோக்கி "ஓ! ராஜாவே! நான் இளைத்திருப்பதாகப் பரிகாசம் செய்தாய். இளைக்காமலிருக்கிறேன் என்பதே நினது கருத்தெனத் தோன்றுகின்றது. அது யதார்த்தமே. பிருதிவிமுதலிய பூதங்களின் சேர்க்கையான சரீரத்திலேயே இளைப்பு முதலிய சப்தங்கள் பெரியோர்களால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் சரீரத்தில் அபிமானமுடையோர்க்கே பருத்திருக்கை, இளைத்திருக்கை, ரோகம், பசி, தாகம், பயம், கலகம், இச்சை, கோபம், அகங்காரத்தினாலுண்டாகிற மதம் இவை யாவும் உள. ஆத்மாவோ இவைகளால் தாக்கப்படாதது. ஆதலால் எனக்கொன்றுமில்லை. பிராணனுடனே மரித்தவனாகவிருக்கின்றனையெனச் சொன்னாய். ஜீவித்தும் ஜீவியாமலிருப்பது யான் மாத்திரமல்ல. பிரபஞ்ச முழுவதும் அங்ஙனமே யிருக்கின்றது. ஏனெனில் அது உள்ளதுபோற் றோன்றினும் யதார்த்தத்தில் இல்லதெனவே பெரியோர்கூறுகின்றனர். இது நிற்க, என்னைத் தண்டிப்பதாகக் கூறினை. ராஜன் என்பது உன்னிடத்தும் சேவகன் என்பது என்னிடத்தும் நிலைத்திருக்குமானாலன்றோ நீ என்னைச் சிக்ஷிப்பேனென்று சொன்னது யுக்தமாகும்? "அவை நிலைத்திராவிட்டாலும், நான் ராஜாவாயிருக்கிறமட்டும் உன்னைத் தண்டிக்கத்தகும்" என்று சொல்வாயாயின், ராஜன் என்பவன் யாவன்? சேவகன் என்பவன்யாவன்?

அவனைத் தெரியச்சொல்லக்கடவாய். நானே ராஜா; இவர்களே சேவகர் என்கிற அபிமானம் உனக்கு நடித்திருக்குமானால், நான் உனக்குச் செய்யவேண்டியதைச் சொல்லக்கடவாய். தேகாபிமானமுள்ளவர்களைத் தண்டிப்பாயானால் ஏதாவது பிரயோஜனமுண்டாகலாம். அனாத்மமானவையனைப்பதில் என்ன பிரயோஜனம்? தண்டித்தாலும் தண்டிக்காது விடுத்தாலும் எனக்கு ஒன்றுதான்." என்றிந்தப்பிரகாரம் கூற, தத்துவத்தையறியவேண்டுமென்னும் இச்சைமேலிட்டிருக்கும் சவ்வீரதேசாதிபதியானவன், ராஜாவென்கிற அபிமானத்தைவிட்டு, சீக்கிரமாகப் பல்லக்கினின்றும் இறங்கி, ஜடபரதருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து கைகூப்பி நின்றுகொண்டு "ஸ்வாமின்! நீர் யார்? அறியப்படாத மகிமையையுடையவராய்ச் சஞ்சரிக்கிறீர். யாருடைய புத்திரர்? எங்கேயிருக்கிறவர்? என க்ஷேமத்தின் பொருட்டாக வந்தீரோ? கபிலமகாரிஷிதானோ? நான் தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்துக்கும் பயப்படுகிறதில்லை. ருத்திரனுடைய சூலத்துக்கும் பயப்படுகிறதில்லை, யமனுடைய தண்டத்துக்கும் பயப்படுகிறதில்லை. ஆனால் மகாத்மாக்களுக்கு மிகவும் பயப்படுவேன். ஆகையினாலே நான் கேட்டதற்கு அனுக்கிரகம் பண்ணவேண்டும். இந்தச் சம்சாரசாகரத்திலே ரட்சகமாயிருக்கிற தத்துவத்தைக் கபிலமகாரிஷியினிடத்தில் கேட்கவேண்டுமென்னும் ஆவலோடு புறப்பட்டுவந்தேன். அந்தக் கபிலமகாரிஷியே இவ்வேடத்தோடு வந்தனரோ அறியேன். மூடனாகிய யான் யோகிகளுடைய சக்தியை யெப்படி அறிவேன்? யுத்தமுதலிய கர்மங்களால் எனக்குச் சிரமமுண்டாவதுபோல இதுவரை இப்பல்லாக்கை யெடுத்து வந்ததினால் உமக்கும் சிரமமிருக்குமென்றெண்ணுகிறேன். சிரமமில்லையென்று நீர் சொல்வது எவ்வாறு பொருந்தும்? அக்கினியினாலே பாத்திரம் தகிக்கப்பட்டால் அதற்குள்ளிருக்கும் ஜலமும் தகிக்கப்படுதல்போல, வெயில் முதலானதினாலே தேகம் தகிக்கப்பட்டால் தேகத்திலுண்டான இந்திரியங்கள் தகிக்கப்படுகின்றன. இந்திரியங்கள் தகிக்கப்பட்டால் பிராணன் தகிக்கப்படுகின்றது. பிராணன் தகிக்கப்பட்டால் மனம் தகிக்கப்படுகின்றது. மனம் தகிக்கப்பட்டால் ஆத்மா தகிக்கப்படுமென்று நினைக்கிறேன். ஆதலால் உமக்கு இவ்வளவு சிரம கஷ்டம் கொடுத்த என்னை மன்னித்தருளவேண்டும். சகல பிராணிகளுக்கும் ஹிதம் செய்பவராயும் தேகாபிமானமில்லாதவராயுமிருக்கிற நீர் சர்வதயா சமதிருஷ்டியுடைத்தா யிருப்பதினால் எனது அநாதரவைக் கவனிக்கமாட்டீராயினும், பெரியோர்களை அவமதித்தவன் ஈசுவரனாயிருந்த போதிலும் க்ஷணநேரத்தில் எரிந்துப்போவானாதலின், என்னை ரட்சிக்கவேண்டும் என்றிரந்தனன்.

[இன்னும்வரும்]

V. சண்முகம்பிள்ளை.

"கடவுள் நம்முடைய சரீரத்தில் எவ்விதமிருக்கிறார் என்றால் பீச்சாங்குழலுக்குள்ளிருக்கும் கம்பைப்போலிருக்கிறார் அதாவது சரீரத்திலிருந்தும் இல்லாதவர் போலக் காணப்படுகிறார்"— ஸ்ரீ ராமகிருஷ்ணர் (Sree Ramakrishna).

"கள்ளனைக் களவுசெய்யும்படி தூண்டுகிற கடவுள்தானே வீட்டுக்காரனைப் பத்திரமாயிருக்கும்படிக்கும் தூண்டுகிறார்"- ஸ்ரீராமகிருஷ்ணர் (Sree Ramakrishna).

WHENCE AND WHERE AM I!

(AN ALLEGORY).

எங்கிருந்தெங்கு வந்தேன்!

[ஓரொட்டுவமை.]

அதி அற்புதமான மாடமாளிகை கூடகோபுரங்களால் அலங்கரிக்கப்பட்டதும் கண்டோர் கண்ணைக் கவரத்தக்க பல விநோதக்காக்ஷிகளுள்ளதும், இலக்குமிக்குப் பிறப்பிடமிதுதானோ வென்றையுறத் தக்கவண்ணம் சகலவளங்களும் செல்வங்களும் நிறையப்பெற்றதும், பிரம்மபுரம் எனப்பெயர் வாய்ந்ததுமாய வோரழகிய பட்டணமொன்றுளது. நான் அப்பட்டணத்திற் பிறந்தவன். அவ்வழகிய பட்டணத்திற் பிறந்தவாகிய வோர் பெறும் பேற்றையுடையயோனாயிருந்தும், அப்பட்டணமெவ்விடத்துள்ளதென்றும், அது எவ்விதத்திற் பெருமைபெற்றுள்ளதென்றும் நான் அறியாதிருந்தேன். அது மாத்திரமல்ல, அங்ஙனமொரு பட்டணமுளதென்ற விவரமுந்தெரியாதவனாயிருந்தேன். நான் அப்பட்டணத்திற் பிறந்தவனென்றும், அதின் சிறப்புகளித்தன்மைத்தென்றும் எனது நன்மையைக் கருதுமோர் நண்பரெனக்குக் குறித்தறிவித்தார். பிறந்தவிடத்தைப்பற்றி மூடமூடனாயிருப்பதற்குக் காரணமென்னை யெனின், என்னுடைய பால்யத்திலேயே யான் அப்பட்டணத்தினின்றும் நீங்கி, வந்தவிடத்தில் அதிக மகிழ்ச்சிகொண்டு, எனது தோழர்களுடன் கண்டவிடமெலாந்திரிந்ததே. யான் அப்பட்டணத்தினின்றும் நீங்கியபின்னர் மாயாபுரத்திலுள்ள அநேக குக்கிராமங்களில் வசித்தேன். இப்பொழுதோ, முன்னர் வசித்த கிராமங்களிலெல்லாம் ஏற்றமுடையதும், என்னுடைய சுவதேசமாய பிரம்மபுரத்திற்குச் சமீபமாயதுமான வோரழகிய கிராமத்தில் வசிக்கிறேன். இக்கிராமங்களோ வெனின், என் பிறப்பிடத்திற்கு நேர் மாறுபுள்ளவைகளென் றிப்போதுதா னறிகிறேன். ஆனால் இதற்கு முன், அவைகளே இத்திரப்பட்டணங்களெனவும், அத்தனை சிறப்பும் அழகும்பொருந்திய பட்டணங்கள் வேறெவ்விடத்திலு மில்லையெனவும் மதித்திருந்தேன். அநேக கிராமங்களில் வசிக்க நேர்ந்த காரணமென்னை யெனின், ஒரு கிராமத்தில் வசிக்கப்புகும்போது அக்கிராமம் என்னுடைய சௌகரியத்திற் கேற்றதென நம்பி யவ்விடத்திற் குடியேறினதும், அங்ஙனஞ் சிறிதுகாலமிருந்த பின்னர் அவ்விடத்தில் எனக்குத் திருப்தி வராமல் அதில் வெறுப்படைந்து, வேறு கிராமத்திற்குப் போதலுசிதமென நினைத்து, அடுத்த கிராமத்திற் குடியேறினதும், இவ்விதம் பலவிடங்களிலும் நிலையற்ற காற்றாடியைப்போன்று சுற்றித் திரிந்ததுமே. எனக்குத் திருப்திகரமான ஓரிடத்தையுங் காணாததால் மிகமனநொந்து வருந்திக்கொண்டிருந்தேன். அத்தருணத்தில் கரைகாணாது திகைக்கு மாலுமிக்குத் திடீரெனக் கரை காணப்பட்டதுபோல், என் சௌகரியங்கட்கேற்ற விடம் யான் பிறந்தவிடமே யென்றும், அது இன்னவிடத்துள்ளதென்றும், அதற்குப் போகும் வழி இன்னதென்றும், அதன் மகிமை இன்னதென்றும், முற்கூறிய வண்ணம், எனது அத்தியந்த நண்பரொருவர் எனக்குக் குறித்தறிவித்தார். அங்ஙனம் அவர் எனக்குக் குறித்தறிவித்ததும், பிறந்த விடத்திற்கே போய்விடவேண்டுமென்ற ஆசை எனக்கதிகரித்தது. அதிகரித்தும், அவ்வாசையை நிறைவேற்ற அசக்தனாயிருக்கிறேன். ஏனெனின், யான் போகவேண்டியவிடமோ அதிகத் தூரத்திலுள்ளது. கவை மார்க்கமூரதவோ

சமுத்திரமார்க்கமாகவோ போகக்கூடியதல்ல. ரயில் வண்டியும் ஸ்டீமரும் இல்லையா பின்னையோ, கத்திமுனையில் நடப்பதுபோல் அவ்வளவு கஷ்டப்பட்டுச் செல்லத்தக்க ஒரு வழியினூடு போகவேண்டியதா யிருக்கின்றது. ஆகையால் அவ்வழியிற் சற்றுஞ் சலியாமல் தைரியத்துடன் பிரயாணஞ்செய்தலாவசியகம். தவிரவும் நானிப்போதிருக்குமிடத்தில் அநேகர்களுக்குக் கடன்கொடுக்கவும், சிலரிடத்திலிருந்து கொடுத்த கடனைப் பிரிக்கவும் வேண்டியவனாயிருக்கிறேன். ஆனால் இது ஒரு பெரிய காரியமல்ல. ஏதனாலெனின், இதுமுதல் தானமாகச் செய்யுங் கொடுக்கல் வாங்கல்களை யொழித்துவிடுவேனாயின், மற்றவிவகாரத்தை எனது சுவதேசத்திற்போ யிருந்துகொண்டே ஒதுக்கிவிடலாம். ஆகையால் இப்பொழுது யான் யோசிப்பதெல்லாம் எனது சுவதேசத்திற்கு நடாத்துங் கஷ்டமான வழியில் எங்ஙனம் போவதென்பதே. ஆனால் முற்கூறிய எனது நண்பர் அதற்கு வேண்டிய வுபாயங்களும், பழகவேண்டிய சாதனங்களு மெனக்குச் சொல்லியுமிருக்கிறார். ஆதலின் இனியொற்பமுந் தாமசியாமல் அதற்கான காரியங்களைத் தேடுதலே உசிதமென நினைக்கிறேன். எனது சுவதேசத்திலிருந்து இம் மாயாபுரத்திற்கு வருவதிலெனக்கொரு கஷ்டமுந் தோன்றவில்லை. இதை விட்டுப் பழையவிடத்திற்குப் போகவென்றால் எத்தனை கஷ்டப்படவேண்டியதா யிருக்கிறது. இவ்விடத்திலேயே யிருந்து விடுவோமென்றால் அது மற்றதிலுங் கோடி மடங்கு கஷ்டமாயிருக்கிறதே. ஆகையால் எவ்விதத்தும் பிரம்மபுரம் போய்ச் சேருவதே தகுதியென நினைக்கிறேன். எனது நண்பர்களிலநேகர் இம்மாயாபுரியிலேயே அதிகத் திருப்தியோடு வசிக்கிறார்கள். எங்ஙனம் திருப்தியடைந்திருக்கிறார்களோ யானறிகிலேன். ஆ! ஹா! எங்கேயிருந்து எங்கேவந்து சேர்ந்தேன்!! இனி க்ஷணநேரமும் என்னால் இங்கிருத்தல் முடியாது.

மாயாபுரவாசி.

உயர்ந்த மதில்களாற் சூழப்பெற்ற சிறையில் அடைபட்டுக் கிடக்கும் பக்ஷிக் குஞ்சுகள் தங்களுடைய இறக்கைகள் முழுவதும் வளராததினால் அச்சிறையினின்றும் நீங்க வலியற்றனவாய்த் துன்புறினும் இறக்கைகள் நன்றாய் வளர்ந்தவுடன் யாதொரு பிரயாசையுமின்றி அதனைவிட்டு நீங்கி ஆகாயத்திற் பறந்து எங்ஙனம் சுவாதீனமாய்ச் சஞ்சரிக்குமோ அங்ஙனமே ஆசைக்குரிய மனைவி, புத்திரன், பொன் முதலிய நானாவித விஷயங்களாற் சூழப்பெற்ற சம்சாரத்திற் சிக்கி அதனை விட்டு விலகும் ஆற்றலின்றி வருந்தும் அற்ப அறிவுடைய மாந்தரும் துறவு, மெய்ஞ்ஞானம், என்பனைகள் தங்களிடத்தில் முதிர்ந்தவுடன் சம்சாரத்தைவிட்டு நீங்கி சுவாதந்தரிய முடையவர்களாய், சிதாகாயத்திற் சஞ்சரிக்கின்றார்கள்.—ப.ர்.

*

முகத்திற் கண்ணில்லாதவன் இப்பூபிரதேசத்தில் சஞ்சரிக்க விரும்பின் அஃது பயத்திற்கேதுவே யன்றி வேறன்று. ஆயினும் அவன் கைகால் இவைகளை நேத்திரமாக உபயோகப்படுத்துவானாயின் அவன் செல்லும் வழிகளிலுள்ள குழிகளில் வீழாது ஒருவாறு சஞ்சரித்தல் கூடும். அது போன்று அகத்திற் கண்ணில்லாத ஒருவன் ஞான பூமிகளில் உலாவ இச்சிக்கின் அது வீண் சிரமத்திற்கே ஏதுவாகும். ஆயினும் சாது சங்கம், சத்சாஸ்திரம் இவைகளை நேத்திரமாகக் கொண்டு அவன் நடப்பானாயின் வழிகளிலுள்ள விஷயங்களில் இடறி வீழாது ஒருவாறு சஞ்சரித்தல் சாத்தியமாகும்.—ப.தீ.

STUDENTS' COLUMN.

மாணவர்பக்கம்.

GOD GIVES PEACE.

கடவுள் சாந்தியைக் கொடுக்கிறார்.

மனிதர்களுக்கெல்லாம் பொதுவான குறையொன்றிருக்கின்றது; துன்பங்களையும் தொந்தரவுகளையும் நீக்கி நமக்கு ஆறுதலையும் சுகத்தையும் கொடுக்கத்தக்க ஒரு இடத்தை நாமெல்லாரும் அபேக்ஷிக்கின்றோம். நமது வாழ்க்கையின் மிகவும் அமைதியான நாட்களிலும் நமக்குத் துன்பங்களே நிறைந்திருக்கின்றன. "நான் செய்யவேண்டியவைகளை யெல்லாம் செய்து முடித்துவிட்டேன்" என்று சொல்லத்தக்க நாளைக் காணுதல் அரிதாயிருக்கின்றது. நமது சந்தோஷகரமான நாட்களிலும் செய்யவேண்டிய கடமைகளில் சிலவற்றைச் செய்து முடிக்க வில்லையென்றும் கூடக்கிருக்குங் குறைகள் நிவிர்த்தியாக வில்லை யென்றும் பலதுக்ககரமான எண்ணங்களால் மூடப்படுகிறோம். இங்ஙனமிருக்க, நமது கெட்ட காலங்களில் நாம் அநுபவிக்கும் துன்பத்திற்கோர் அளவுண்டோ! அக்காலங்களில் சிநேகிதர்களுடைய வரவும் பெற்றோர்களுடைய பிரசன்னமும்கூட நமக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணாம லிருக்கின்றன; தனித்திருத்தல் பயங்கரமாயும், சங்கத்திலிருத்தல் அதிலும் அதிகப் பயங்கரமாயும் இருக்கின்றது. சந்தோஷகரமான இயற்கைப் பொருள்களும் துக்கமென்னும் மேகத்தால் மூடப்பட்டிருக்கின்றன; இன்பகரமான பொருள்களும் துன்பகரமான எண்ணங்களை யுண்டுபண்ணுகின்றன. மனுஷ்ய சுபாவம் சாந்தத்தையே நாடுகின்றது; அவனுடைய காதுகள் அச்சாந்த சமாசாரத்தைக் கொண்டு வருபவன் கூறும்மொழிகளைக் கேட்க மிகவும் ஆவலுடையனவா யிருக்கின்றன. சாந்தத்தையும் சுகத்தையும் நாம் அடையக் கூடுமென்று சொல்லுது பாலியர்களுக்கும் விருத்தாப்பியர்க்கும் ஒன்று போலே இன்பகரமா யிருக்கின்றது. இக்குறை யாவர்க்கும் பொதுவாயுள்ளதே.

நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் யாவும் சதா மாறுதலை யடைந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்துப் பார்த்து நாமும் களைத்துப் போனோம். இது நிற்க,

நாம் எப்பொருள்களைப் பற்றிச் சிந்திக்கிறோமோ அப் பொருள்களின் சுபாவத்தையும் குணத்தையும் அடைகிறோமாதலினால் அற்பமும் கேவலமுமான உலகவிஷயங்களில் நமது கவனத்தைச் செலுத்தும்போது நம்முடைய சுபாவமும், அற்பமும் கேவலமுமான தன்மையை அடைகின்றது; ஆனால் நாம் மேலான உண்மைகளைப்பற்றியே சிந்திப்போமானால் நமது சுபாவமும் மேலான தன்மையை அடைகின்றது. சத்தியம், பரிசுத்தம், கடமை இவைகளைப் பற்றிய எண்ணமே, சதா சஞ்சலமுள்ள நமது வாழ்க்கையின் குழப்பங்களிலிருந்தும் நம்மை விடுவித்து, நமக்கு ஆறுதலைக் கொடுக்கத்தக்கதாயிருக்கின்றது. நிலையில்லாத உலகப்பொருள்களையே நமது மனம் எப்பொழுதும் பற்றிச்செல்வதால், அது ஒருபொழுதும் அமைதி பெறுகின்றதில்லை. யாதொரு விகாரமுமின்றி நித்தியமாயும் சொச்சமாயும் சாந்தமாயும்சர்வவியாபகமாயும் விளங்கும் பரம்பொருளினிடத்தில் நமது மனதைப் பற்றச்செய்வோமானால் ஆறுதலும் சாந்தியும் அடைவோமென்பது திண்ணம். சகல மாறுதல்களுக்கும் மத்தியில் 'யாதொருமாறு

திலை மடையாதவராயும், வற்றுதலில்லா அன்புடையவராயும், என்றுமழியாத பேரழகராயும் இருக்கும் கடவுளாருக்குத் தமது மனதை இடையறாத் தியானத்தால் எவ்வாத்மாக்கள் பலிகொடுக்கின்றனவோ அவ்வாத்மாக்களே அவரது சாந்நித்யப்பெறும் பாக்கிய முடையனவா யிருக்கின்றன.

கடவுளையபற்றி ஒருதரம் நினைப்போமாயினும் அது மனதிற்குச் சமாதானத்தைக் கொடுக்கின்றது. கடவுளை நோக்கி நமதெண்ணங்களைத் திருப்புவோமாயின் இச்சம்சார சாகரத்தின் கொந்தளிப்பு நம்மை ஒரு பொழுதும் தாக்காதென்பது நிச்சயம். ஒரு கணமேனும் நமது மனதைக் கடவுளினிடத்தில் செலுத்துவோ மாகில் நமக்கு எவ்வளவு ஆறுதலுண்டாகும்! பாலைவனத்தில் யாத்திரை செய்யும் பிரயாணி ஒருவனுக்கு ஸ்படிகம் போன்ற தெளிவான ஜலம் நிறைந்த ஓடையும், தண்ணெனக் குளிர்ந்த சோலையும் எதிர்ப்படுமாயின் எவ்வளவு ஆறுதலும் சந்தோஷமும் உண்டாகுமோ அதிலும் எத்தனையோ மடங்கு அதிகமாக உண்டாகின்றது. சிற்சில சமயங்களில் கடவுளை நோக்கி நமக்குண்டாகும் அத்தகைய எண்ணங்கள் அவற்றிற்குத்தக்க பிரயோஜனத்தைக் கொடுப்பினும் என்றுமழியாத மெய்ச்சுகத்தை நமக்குக் கொடுக்கப் போதியனவல்லவா யிருக்கின்றன. காமக்குரோதாதிகளால் தாக்கப்படாத அத்தகைய மேலான நிலைமை யடையும் பொருட்டு நாம் எப்பொழுதும் கடவுளுடைய சன்னிதானத்திலேயே யிருத்தல் வேண்டும்; அதாவது அவரது அன்பு, தயை, நீதிமுதலியன நம்மிடத்தி லிருக்க வேண்டும்; மென்மையான வார்த்தைகளினால் மாத்திரம் பிரயோஜனமில்லை; ஆனால் மனவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களுமொத்த நடக்கையினால் காண்பிக்க வேண்டும். யாவனொருவன் கொடிய துன்பம் வந்தடைந்தகாலத்தும் கடவுளானவர் அன்பே வடிவமாயிருக்கிறா ரென்றும் அத்துன்பம் அவனது நன்மைக்கே வந்திருக்கிற தென்றும் நேர்ந்து பொறுமையோடு சகிக்கிறானோ அவனே சுகத்தை யடைகின்றான்.

கடவுளின் சன்னிதானத்தில் நாம் வசிப்போமாகில் இவ்வாழ்க்கைப் போரில் ஜெயம் பெறுவோ மென்பது நிச்சயம். நமது வாழ்க்கையின் துக்கமோகாதிகள் கடவுளென்னும் ஒரு பெரிய சக்தியால் ஜெயிக்கப் படுகின்றன. ஒரு பெரிய விஷயத்தால் நமது இருதயம் நிரம்பப்படுங்கால் அதிலுள்ள சிறிய விஷயங்கள் ஓடிப்போகின்றன. இவ்வுலகிலுள்ள அற்பவிஷயங்கள் நம்மைத் தாக்காம லிருக்கவேண்டுமாயின் அவற்றைப்பார்க்கிலும் மேன்மையானதும் சத்தியமானதும் நித்தியமானதுமான பொருளுக்கு நமது இருதயத்தி லிடங்கொடுக்க வேண்டும். அப்பொருள் கடவுளே யாவர். அவர் வசிக்கப்பெற்ற இருதயத்தை யுடையாரே இவ்வுலக விஷயங்களைத் திருணமாகக் கருதும் ஆற்றலுடையார். கடவுளென்பார் ஒரு சொப்பனப்பொருளோ, சாயாமாத்திரமோ அல்லர்; ஆனால் நித்தியமாயுள்ள சத்தியப் பொருளாயிருக்கின்றார். அவரை நினையாமல் எத்தனைகால மிருக்கின்றோமோ, அத்தனைகாலமும் நமக்குச்சஞ்சலமும் துக்கமுமே உள்ளன. அவர் எவ்விடத்தில் இருக்கிறாரோ அவ்விடத்திலேயே சாந்தமும், சுகமும், ஆறுதலு முளவாதலின் ஒவ்வொருவரும் தமது இருதயத்தை அவர்க்கு இருப்பிடமாய் அமையும்படி பரிசுத்தப்படுத்தி சாந்தியடையும்பொருட்டு முயல்வாராக

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது."

(ப—ச)

WISE THOUGHTS.
விவேக விசாரங்கள்.

பலாப்பழமானது புறமெல்லாம் முட்களையுடையதாய்த் தன்னை நெருங்குபவர்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பது போன்று தோன்றுகின்றது. ஆனால் அதினகத்துள்ள சுளைகள் நாவிற்கு மதுரத்தைக் கொடுத்து மனதைக்களிக்கச் செய்கின்றனவன்றோ? அது போன்று சிலமாந்தர் தோற்றத்தில் பயத்தையும் துன்பத்தையும் உண்டு பண்ணுபவர் போன்றிருப்பினும் அந்தரங்கத்தில் சாந்தமுடையவர்களாய்த் தம்மைச் சமீபிக்கின்றவர்களின் செவிக்கு இன்பமுதவி மனதிற்கு ஆனந்தம் விளைவிக்கின்றனர்.

⁂

எஜமானனுடைய இச்சைப்பிரகாரம் வேலைக்காரர்களுடைய கூட்டமும் பிரிவுமுண்டாகின்றன. அவனுடைய உத்திரவுப்படி அவர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்திருக்கவோ ஒருவரை விட்டொருவர் பிரிந்திருக்கவோ நேருங் காலங்களில் மகிழ்தல் அல்லது வருந்துதல் விவேகிகட்கழகன்று. அது போன்று அண்டசராசரங்களுக்கும் பதியாக விளங்கும் ஈசுவரனுடைய சங்கற்பானுசாரம் உலகத்தில் மாந்தர் ஒருவரோடொருவர் (பந்து மித்திரர்களாக) கூடவும் ஒருவரை விட்டொருவர் (மரணத்தினால்) பிரியவும் சம்பவித்தலின் அங்ஙனம் சம்பவித்த காலங்களில் அதற்காக அறிவுடையோர் களித்தலோ துக்கித்தலோ செய்யார்.

ப-ரீ.

REVIEW.

Prabuddha Bharata or Awakened India is a monthly magazine now published by the Vivekananda Brotherhood at Mayavati, Himalayas. During the first few years of its existence, it was edited at Madras by the late Mr. B. R. Rajam Iyer, B. A whose untimely demise was the cause of a temporary death to the journal itself. We have had the privilege of being on intimate terms with the first editor who was an extraordinarily clever man, and to whose talents, exertions, and character alone the success of the journal was due at the outset. As the Magazine was supplying a real want, its disappearance was felt as a great calamity. It was at the country's call that the present editors took up the work and are now doing it as a labour of love. It is a matter for sincere congratulation that they are perpetuating the good traditions of the journal. It is devoted to an exposition of Hinduism, and the articles are written in a simple language. The subscription is so low as Rs 1—8—0 per annum. If the journal has not a very large circulation in India, we cannot but attribute it to the apathy of our countrymen. An advertisement of the journal appears elsewhere.